www.padippakam.com

ITSS

# வெளி

Veli

ஒகஸ்ட் 97 வெளி-1

**வெளியில் உள்ளே:**

பொறுக்கியவை...
மாற்றுக் கலாசாரம்...
தமிழ் சிறார்களின் தாய்மொழிக் கல்வி...
எண்ணியதை எண்ணியபடி எழுதுகிறேன்...

## RRANஇன் முதலாவது திட்டம்

யாழ் தொழில்நுட்பக் கல்லூ
யப் புணருத்தாரணம் செய்வதற
ந அமெரிக்க டொலர் 5,00,000
அமெரிக்க, ஐக்கிய அமெரிக்
வைச் சேர்ந்த உலக அபிவி
தி ஸ்தாபனமும், ஐக்கிய நாடு
சபை அபிவிருத்தி நிறுவனமும்
ந்து வழங்கவுள்ளதாக அறிவித்
ளது. யாழ் மாவட்டத்தில் இயங்
ரும் ஒரேயொரு அரச தொழில்
பக் கல்லூரி என்பதனால் மேற்
செலவு செய்யும் பணம்
ாழில்நுட்பக் கல்லூரித் தேவை
நக்கு பயன்படுத்தப்படும் என்ப
ன மேற்படி நிறுவனங்களே மேற
வை செய்யும்.
கடந்த வருடம் இடம்பெற்ற வன
பலினால் கல்லூரியின் முக்கிய
டடங்கள், தொழில்நுட்ப சாத
ங்கள் என்பன பாவிக்க முடியாத நிலையில் உள்ளதாக அறியப்படுகின்றது.

இவற்றை புணரமைப்புச் செய்வதற்காக உபகரணங்கள் மற்றும் தேவையான சேவைகளை கப்பல் மூலம் கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் அனுப்பி வைப்பதாக இலங்கை அரசு அறிவித்துள்ளது. இப்புணரமைப்பு வேலையே வட இலங்கை புணர்குடியமைப்பு புணரமைப்பு நிறுவனத்தின் (RRAN) முதலாவது திட்டமாகும்.

இப்புணரமைப்பு மூலமாக யாழ், முல்லைத்தீவு, கிளிநொச்சி மாவட்டங்களில் கல்வி வசதியின்றி இருக்கும் இளைஞர்களும் யுவதிகளும் இத்தொழில் நுட்பக் கல்லூரியில் படிப்பதற்கு வசதி செய்து கொடுக்கப்படும் என்றும் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## EROS சங்கர் ராஜ் கைதி: RAW கைவிரிப்பு

**முன்னாள் EROS மத்திய குழு உறுப்பினரான சங்கர் ராஜி இந்திய மத்திய புலனாய்வுத் துறையினரால் பெருந் தொகைப் பணத்துடன் அண்மையில் இந்திய விமான நிலையத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார்.**

இவர் பற்றிய மேலதிக விசாரணையின் போது இவர் தான் RAW உறுப்பினர் எனத் தெரிவித்திருந் தார். இதனை ஊர்ஜிதம் செய்ய RAW உடன் தொடர்பு கொண்ட போது RAW தமக்கும் சங்கர் ராஜிக் கும் எவ்வித சம்பந்தமும் இல்லையென்று கூறிவிட்டது.

சங்கர் ராஜி பலகாலமாக RAW வின் உறுப்பினர் என்பது இலண்டனில் பலரும் அறிந்ததே. ஆனாலும் இவரது கைதுக்கான காரணம் இவர் இரட்டை ஏஜென்டாகத் தொழிற்பட்டமையே என்று அண்மைச் செய்திகள் கூறுகின்றன.

இன்று இவரது விடுதலை கேள்விக்குறியாக இருப்பதானது மேலாதிக்க உளவு ஸ்தாபனங்களை நம்புவதன் ஆபத்தையே உணர்த்துகிறது.

## 'ஜெயசிக்குறு' இதுவரை 40 பேர் பலி

### முல்லை அரச அதிபர் அறிக்கை

ஸ்ரீலங்கா அரசினால் கடந்த
ம மாதம் 13ம் திகதி ஆரம்பிக்
ப்பட்ட 'ஜெயசிக்குறு' இராணுவ
டவடிக்கையினால் இதுவரை 40
க்கள் பலியானதுடன் 35 பேர்
டுகாயமடைந்துள்ளனர்.

முல்லை அரச அதிபர், சந்தி
க்கா அரசிற்கு அனுப்பிய தனது
ாதாந்த அறிக்கையில் மேற்படி இராணுவ நடவடிக்கையினால் பலியான பொதுமக்களின் விபரங்களைப் பட்டியலிட்டுக் காட்டியுள்ளன.

| | | | |
|---|---|---|---|
| ஒட்டுசுட்டான் | 18 | பேர் | மரணம் |
| | 15 | பேர் | படுகாயம் |
| நெடுங்கேணி | 13 | பேர் | மரணம் |
| | 16 | பேர் | படுகாயம் |
| மாங்குளம் | 09 | பேர் | மரணம் |
| | 04 | பேர் | படுகாயம் |

**இந்தப்படம் சம்பந்தமாக உங்களது கருத்தை கதை, கட்டுரை அல்லது கவிதையாகவோ எங்களுக்கு எழுதி அனுப்பவும். சிறந்தவை பிரசுரிக்கப்படும்.**



## கல்லூரிப் பூக்கள் 97

ITSS ( சர்வதேச தமிழ் மாணவர்
மன்றம்) இன் முதலாவது கலாச்சார
நிகழ்ச்சியாகிய கல்லூரிப் பூக்கள்
97 ஒக்டோபர் மாதமளவில் Bark-
ing இல் நடைபெறவுள்ளது.

நாடகம், நடனம் மற்றும்
ந.பாலேந்திராவின் நெறியாள்
கையில் அமைந்த கவிதா நிகழ்வு
ஆகியன இடம்பெறவுள்ளன. இதில்
பெறப்படும் பணம் தெல்லிப்பழை அநாதைகள் இல்லத்திற்கு அனுப்பி வைக்கப்படும். இங்கு அநாதைக் குழந்தைகளும் விதவைப் பெண்களும் பராமரிக்கப்படுகிறார்கள் என்பது யாவரும் அறிந்ததே

விபரங்களுக்கு :
eb 220@ city.ac.uk
ez 159 @city.ac.uk
sivasuth @dcs.kcl.ac.uk

RANJIT & CO

For all legal services relating to
IMMIGRATION, ASYLUM APPLICATION, CIVIL LITIGATION,
CRIMINAL LITIGATION & POLICE STATION WORK

Ranjit & Co Solicitors
176 Mitcham Road, London SW 17 9NJ
Tel: 0181- 767 9717

படிப்பகம்

www.padippakam.com



வெளி
மாத இதழ்

Veli
Publications Ltd
P O Box: 14936
London
NW9 0WB

Tel/Fax:
0181 672 8583



# யூதர்களின் காவலரணான இஸ்ரேல் ?

நாசிகளின் அட்டூழியத்திலிருந்து யூதர்களைப் பாதுகாக்கவென 1947-1948 இல் உருவாக்கப்பட்ட இஸ்ரேல் நாடு இன்று யூதர்களுக்கு எந்தளவில் பாதுகாப்பானதாக இருக்கிறது என்பது ஆராய்விற்குரிய விடயம்.

காலங்காலமாக கிழக்கு ஐரோப்பாவில் வாழ்ந்த யூதர்களின் ஒரு பகுதியினர் இனியும் தமக்கு அங்கு பாதுகாப்பு இல்லையென்று உணரத் தலைப்பட்டனர். தமக்கென ஒரு தாய் நிலம் வேண்டுமென்பது நெடுங் காலமாகவே அவர்களது கனவாக இருந்து வந்திருக்கிறது. இந்த சிந்தனையைக் கொண்ட சியோனிஸ்ட்டுக்கள் பாலஸ்தீனத்தையே தமது தாயகமாகக் கருத்தில் கொண்டிருந்தனர்.

மில்லியன் கணக்கான யூதர்கள் கிழக்கிலிருந்து மேற்கு ஐரோப்பாவிற்கு இடம் பெயரத் தொடங்கினர். அதே நேரத்தில் ஒரு சில இலட்சம் யூதர்கள் பாலஸ்தீன நிலப்பிரபுக்களிடம் இருந்து நிலத்தை வாங்கி அங்கிருந்த அராபிய விவசாயிகளை அப்புறப்படுத்திக் கொண்டு தமது குடிப்பரம்பலை ஆரம்பித்து வைத்தனர்.

இரண்டாம் உலக யுத்தத்தின் நிமித்தம் நிகழ்ந்த துயரத்தை அடுத்து சியோனிஸ்ட்டுக்களின் கனவு நனவாகத் தொடங்கியது.

யூதர்களுக்கு ஜேர்மனியில் நடந்து கொண்டிருந்த கொடுமை பற்றி மற்றைய நாடுகள் அந்த நேரத்தில் பெரிதாகக் கண்டு கொள்ளவில்லை. பிரித்தானியக் குடிவரவுச் சட்டங்கள் கூட யூதர்கள் ஜேர்மனியிலிருந்து தப்பி ஓடிவருவதைக் குறைக்கும் விதத்திலேயே அமைந்திருந்தது.

யுத்தம் முடிவிற்குக் கொண்டு வரப்பட்டதும் பிரித்தானியா, அமெரிக்கா, பிரான்ஸ் மற்றும் ரஷ்யா ஆகிய நாடுகள் யுதர்களின் நாட்டை அமைக்க உதவின. ஆனால் அது பின்னாளில் பாலஸ்தீனர்களின் தீராத கொடுமைகளுக்குக் காரணமாய் அமைந்தது.

6 சதவிகித நிலப்பரப்பில் வாழ்ந்து கொண்டிருந்த யூதர்களுக்கு 1947 இல் 55 வீத பாலஸ்தீனம் பிரித்துக் கொடுக்கப்பட்டது. 4,00,000 அராபியர்கள் யூத எல்லைக்குள் வாழ நேர்ந்தது. யூத இனத் தலைவர்கள் எல்லைகளை பிரிவு படுத்தத் தொடங்கினர். அராபியர்களின் அகதி வாழ்க்கை இங்கேயே ஆரம்பமானது.

1947-1948 காலத்தில் சியோனிஸ்ட்டுக்கள் ஒரு மில்லியன் அராபியர்களை விரட்டியடித்தனர். HALIFA போன்ற நகரங்களில் பெற்றோல் வெடிகுண்டுகள் பறல் பறலாகவும் டைனமைற் வெடிகுண்டுகளும் குடியிருப்புப் பகுதிகளில் ஈவிரக்கமற்ற முறையில் வீசப்பட்டன.

இஸ்ரேலிய வரலாற்று ஆய்வாளர் BENNY MORRIS இந்தச் சம்பவத்தை விபரிக்கையில்

'சியோனிஸ்ட்டுக்கள் எல்லா அராபியர்களையும் பாரபட்சமின்றித் தொடர்ந்து சுட்டுத்தள்ளிக் கொண்டிருந்தனர். ஓடிக்கொண்டிருந்த பெண்கள், சிறுவர்கள் கூட இலக்குப் பார்த்துச் சுட்டு வீழ்த்தப்பட்டனர்.

அந்தக் கோரம் ஓட்டுமொத்தமாக முடியும் போது புதிய இஸ்ரேல் 80 வீதமான பாலஸ்தீனத்தை தனது எல்லைக்குள் கொண்டிருந்தது.

இந்தக் கோரமான இன அழிப்பிற்கான விளைவுகளின் விலைகளையே இன்று யூதர்களும் அராபியர்களும் செலுத்தி வருகின்றனர்.

அடக்குமுறை, அட்டூழியம், யுத்தம் இவை தான் 'தூய இன' உருவாக்க முயற்சியின் விழைபொருட்கள்.

இஸ்ரேல் காலனி ஆதிக்கவாதிகளால் உருவாக்கப்பட்டது. அது பாலஸ்தீன நிலத்தைக் களவாடிப் பெறப்பட்டது. உலகெங்கும் உள்ள யூதர்களை இஸ்ரேலில் குடியேற அனுமதிக்கும் அரசு பாலஸ்தீன மக்களை தமது சொந்த நிலத்தில் வாழும் உரிமையை மறுக்கிறது.

1967 ஆம் ஆண்டு யுத்தத்தின் (காஸா,வெஸ்றபாங்க் அபகரிப்பு) வரலாற்று நாயகன் MOSHE DAYAN அராபியர்களின் சோகத்திற்காக முதலைக் கண்ணீர் வடித்த அதேநேரம் இந்த யுத்தம் தமது விதி எனும் கோட்பாட்டை நிறுவினார்.

இஸரேலிய அராபியர்களின் எதிர்காலம் சிக்கல் நிறைந்தது என்றாலும் இன்று பேச்சு வார்த்தை மூலம் ஓரளவு நம்பிக்கையான சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. தொடரும் குண்டு வெடிப்புக்கள் அமைதியின் உறுதியைக் கேள்விக்குள்ளாக்கி உள்ளன.

இஸ்ரேலிய, பாலஸ்தீன நலன்கள் அரபுலகத்தின் நலன்களுடனும் கூடவே அமெரிக்கா தலைமையிலான ஏகாதிபத்தியங்களினதும் நலன்களிலும் பின்னிப் பிணைந்திருப்பதால் நிலமை சிக்கல் நிறைந்ததாகவே உள்ளது.

● ESTATE AGENTS ● LETTING MANAGEMENT ● PROPERTY MAINTENANCE

வீடுகளை வாடகைக்கு வழங்குவதில் East London, Essex பகுதிகளில் நம்பிக்கை,
நாணயம் மிக்க சேவையை வழங்குவதில் முன்னணியில் நிகழ்பவர்கள்!

TILKO
PROPERTY SERVICES

WALTHAMSTOW BRANCH
252, Hoe Street, Walthamstow , London E17 3AX
Tel: 0181 520 9968 Fax: 0181 503 7661

EAST HAM BRANCH
213, High Street,
East Ham, London E6 1JD
Tel: 0181 472 0029, Fax: 0181 503 5996

ILFORD BRANCH
101 Cranbrook Road
Ilford, Essex IG7 4PD
Tel: 0181-514 1422, Fax: 0181-553 3991

வீட்டுச் சொந்தக்காரர்களுக்கு: வாடகைக்கு நாம் பொறுப்பு!

www.padippakam.com



## 'வெளி'யில் இருந்து....

அன்பான வாசக நெஞ்சங்களே!

'வெளி' முதலாவது பத்திரிகை உங்கள் கைகளில் தவழ்கிறது. ஐரோப்பாவில் பல பத்திரிகைகள் வெளிவருகின்றன. இது என்ன புதிதாக ஒன்று என நீங்கள் புருவத்தை உயர்த்துவது புரிகிறது. அதனால் 'வெளி' யைப் பற்றி வெளிப்படையாக சில வார்த்தைகள். உங்கள் புருவம் உயர்ந்து கேள்விக் குறியாய் நிற்பதற்கு பல அர்த்தங்கள். அதில் முக்கியமானது புலம் பெயர்ந்த சூழலில் பல பத்திரிகைகள் வருகின்றனவே! அதைவிட இலங்கையில் இருந்து இந்தியாவில் இருந்து பல வருகின்றனவே. அப்படி இருக்க பத்தோடு பதினொன்றாக இன்னோர் பத்திரிகை தேவையா? உங்கள் நியாயமான கேள்வி எமக்கு புரிகிறது இதற்கு எமது பதில் 'வெளி' மட்டுமல்ல இன்னும் பல பத்திரிகைகள் தேவை என்பதே. ஆனால் பத்தோடு பதினொன்றாய் அல்ல பயனுள்ள விடயங்களோடு. எந்தளவுக்கு பயனுள்ள பத்திரிகைகள் வருகின்றனவோ அந்தளவுக்கு வாசிப்புப் பழக்கம் மக்களிடம் உள்ளது என்று பொருள். சமூகம் விழிப்புணர்ச்சியுடன் உள்ளது இதன் வெளிப்படை.

ஆரம்பகாலங்களில் ஐரோப்பா எங்கும் பல சிறு பத்திரிகைகள் வெளிவந்தன. அவை சிறு பரப்பைக் கொண்டிருந்த போதும் பல்வேறு மாற்றுக் கருத்துக்களையும், அதற்கான களத்தையும் பிரதிபலித்தன. பின் அவை அப்படியே நின்று விட்டன. நின்றதற்கு பல காரணங்கள். பின் சிறிது இடைவெளி விட்டு அவற்றின் இடத்தை பெரும் பத்திரிகைகள் பிடித்துக் கொண்டன. அவை வியாபார ரீதியாகவும் வெற்றி அடைந்ததனால் நின்று நிலைக்கின்றன. வெற்றியடைய முடியாத சில நின்றுவிட்டன. வணிக நோக்கம் கொண்டு வெளிவரும் பத்திரிகைகள் அதனையே பிரதான குறியாய் வைத்துள்ளன. மற்றவை இரண்டாம் பட்சம் தான். இன்று வெளிவரும் பல பெரிய பத்திரிகைகள் ஏதோவொரு வகையில் தமக்கு சாதகமான கருத்துக்களையே பிரதிபலித்துக் கொண்டிருக்கின்றன. 'நடுநிலமை' என்பதெல்லாம் ஒரு வரையறை வரைக்கும் தான். இது தான் எதார்த்தமும் கூட. சமூகத்தில் பலதரப்பட்ட உண்மைகள் நிலவுகின்றன. அதனால் பல பத்திரிகைக்கான தேவை சமூகத்தில் இருக்கின்றது. இந்த பல உண்மைகள் முட்டி மோதும் போது எது சரியானது என்பது புலப்படும். உண்மைகளை புரிந்து கொள்ளும் திறமை மக்களிடம் உள்ளது. ஆனால் அதற்கான வாய்ப்புக்கள் மறுக்கப்பட்டு இருக்கின்றது என்பதே உண்மை. இது நேரடியாக நடைபெறுவதை விட மறைமுகமாக நடைபெறுகிறது. பத்திரிகைச் சுதந்திரம், நடுநிலமை என்பதெல்லாம் வால் பிடிக்கும் போக்காக மாறியுள்ளது. இந்தச் சுழலில் சிறு சஞ்சிகைகளிடம் காணப்படும் கருத்துச் சுதந்திரம் மாற்றுக் கருத்துக்களுக்கான களம் என்பவற்றை கடைப்பிடிப்பதோடு பெரிய பத்திரிகைகளில் காணப்படும் ஜனரஞ்சகத் தன்மையையும் 'வெளி' சுவீகரித்துக் கொள்ளும். சுருக்கமாக கூறினால் சிறு-பெரிய பத்திரிகைகளுக்கு இடையிலான பாலமாக 'வெளி' திகழ முயற்சிக்கிறது. இதில் எந்தளவு வெற்றி கிட்டும் என்பது வாசகர்களாகிய உங்களது கைகளிலும் தங்கியுள்ளது.

பத்திரிகைச் சுதந்திரம், கருத்துச் சுதந்திரம் என்பவை கேலிக்குரியதாகவும் தலைகீழாகவும் உள்ள இன்றைய உலகச் சூழலில் இன்னொரு விடயத்தையும் இங்கு குறிப்பிடவேண்டியுள்ளது. கருத்துச் சுதந்திரம் என்ற பெயரில் நமது தேசவிடுதலைப் போராட்டத்திற்கு எதிரான மற்றும் சமூகப் பொறுப்பற்ற கருத்துக்களுக்கும் 'வெளி' களம் அமைத்துக் கொடுக்காது. இதற்கு அர்த்தம் இவை பற்றிய விவாதங்களை, விமர்சனங்களை மறுதலிப்பது என்பதல்ல. உண்மையில் தேச சமூக வளர்ச்சிக்கு இவை இன்றியமையாதவை. ஏன் நல்ல பத்திரிகையின் வளர்ச்சிக்கும் இவை இன்றியமையாதவை தான். ஆகவே ஆக்கதாரர்கள், கட்டுரையாளர்கள், விமர்சகர்கள், செய்தியாளர்கள் தயங்காமல் தங்கள் பங்களிப்புக்களை வழங்கலாம். உங்கள் ஒத்துழைப்புடனேயே 'வெளி' பல இடைவெளிகள் இல்லாமல் தொடர்ந்து வருவது தங்கியுள்ளது. மேற்கூறிய பொதுவான வரையறைகளின் அடிப்படையில் பிரசுர முடிவை ஆசிரியர் குழுவே எடுக்கும். அடுத்து நிதிப்பங்களிப்பு மிக முக்கியமானது என்பது சொல்லாமலே விளங்கும். விளம்பரதாரர்கள் உங்கள் விளம்பரங்களை தந்து உதவும் படியும், ஆர்வமுடையோர் விளம்பரங்களைச் சேர்த்து தரும்படியும் 'வெளி' வேண்டிக் கொள்கிறது.

இறுதியாக!

எமது எண்ணத்தில் எழும் சிந்தனைகளை எழுத்துருவத்தில் தருவதற்கு இந்த ஒரு 'வெளி' போதாது. அதற்கு பல 'வெளி'கள் தாண்ட வேண்டும். பல வெளிகள் வருவதும், அது உங்கள் மன 'வெளி'களில் இடம் பிடிக்க வேண்டும் என்பதும் எமது ஆவல். ஆகவே வாசகர்களே உங்கள் சிந்தனை 'வெளி'களைத் திறந்து வையுங்கள். மீண்டும் அடுத்த வெளியில் சந்திப்போம்.

**ஆசிரியர் குழு**

## RRANஇன் முதலாவது திட்டம்

யாழ் தொழில்நுட்பக் கல்லூரியைப் புணருத்தாரணம் செய்வதற்காக அமெரிக்க டொலர் 5,00,000 ஐ அமெரிக்க, ஐக்கிய அமெரிக்காவைச் சேர்ந்த உலக அபிவிருத்தி ஸ்தாபனமும், ஐக்கிய நாடுகள் சபை அபிவிருத்தி நிறுவனமும் சேர்ந்து வழங்கவுள்ளதாக அறிவித்துள்ளது. யாழ் மாவட்டத்தில் இயங்கி வரும் ஒரேயொரு அரச தொழில் நுட்பக் கல்லூரி என்பதனால் மேற்படி செலவு செய்யும் பணம் தொழில்நுட்பக் கல்லூரித் தேவைகளுக்கு பயன்படுத்தப்படும் என்பதனை மேற்படி நிறுவனங்களே மேற் பார்வை செய்யும்.

கடந்த வருடம் இடம்பெற்ற வன்செயலினால் கல்லூரியின் முக்கிய கட்டடங்கள், தொழில்நுட்ப சாதனங்கள் என்பன பாவிக்க முடியாத நிலையில் உள்ளதாக அறியப்படுகின்றது.

இவற்றை புணரமைப்புச் செய்வதற்காக உபகரணங்கள் மற்றும் தேவையான சேவைகளை கப்பல் மூலம் கொழும்பிலிருந்து யாழ்ப் பாணம் அனுப்பி வைப்பதாக இல ங்கை அரசு அறிவித்துள்ளது. இப்பு ணரமைப்பு வேலையே வட இலங்கை புணர்குடியமைப்பு புணரமைப்பு நிறுவனத்தின் (RRAN) முதலாவது திட்டமாகும்.

இப்புணரமைப்பு மூலமாக யாழ், முல்லைத்தீவு, கிளிநொச்சி மாவட்டங்களில் கல்வி வசதியின்றி இருக்கும் இளைஞர்களும் யுவதிகளும் இத்தொழில் நுட்பக் கல்லூரியில் படிப்பதற்கு வசதி செய்து கொடுக்கப்படும் என்றும் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## 23வது இலக்கியச் சந்திப்பு

எதிர்வரும் செப்டம்பர் 13, 14ஆம் திகதிகளில் பிரான்ஸில் 23வது இலக்கிய சந்திப்பு நடைபெறவுள்ளது. இந்த சந்திப்பானது 1988ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் ஜேர்மனியிலுள்ள சில இலக்கிய ஆர்வலர்களால் ஆரம்பிக்கப்பட்டு இன்று வரை தொடர்ச்சியாக நடைபெற்று வருகிறது. இச்சந்திப்பு 13 தடவைகள் ஜேர்மனியின் பல பாகங்களிலும் பின்னர் 14ஆவது சந்திப்பு பிரான்ஸிலும் அதனைத் தொடர்ந்து ஐரோப்பாவின் நெதர்லாந்து, சுவிட்சர்லாந்து, இங்கிலாந்து மற்றும் கனடாவிலும் நடைபெற்றது குறிப்பிடத்தக்கது.

செப்டம்பர் 13, 14 1997 GARGES LES CONESSE - FRANCE

விபரங்கட்கு:
புஷ்பராஜன் –Tel : 39 86 31 30 (Paris)

## தமிழரின் உலகம் உரையாடலை நோக்கி

தமிழர் தம் கலாசாரம் சம்பந்தமான கருத்துக்களை உலகு தழுவிய விஷயங்களோடு வைத்து ஆய்வு செய்ய வேண்டிய காலத்தில் நாம் வாழ்கிறோம். உலகச் சிந்தனைகளைப் பாதிக்கிற அனைத்தும் நம் வாழ்க்கையைப் பாதிக்கின்றன. நமது வாழ்வனுபவங்கள் கூட உலகின் கலாசார நிகழ்வுகளால் மாற்றங்களையடைகின்றன. இத்தகைய சூழலில் கவனங்கொள்ளப்பட வேண்டிய பல பிரச்சினைகள் நம் முன் விரிந்து கிடக்கின்றன. ஆய்வறிவு ஒரு புறமும், அனுபவ அறிவு மறுபுறமும் தனித்தனியே விலகிக்கிடக்கின்றன.

இதைக் கவனங்கொண்டு கல்வித்துறைசார் ஆய்வாளர்களையும், பல்வேறு அரசியல் கலாசாரச் கருத்தரங்குகளில் அனுபவம் பெற்ற அறிஞர்களையும், அவர்தம் பரிந்துரைகளையும் ஒன்றிணைக்க வேண்டிய தேவை எழுகிறது.

இந்நோக்கை நடைமுறைப்படுத்த, தமிழ் தகவல் நடுவம் ஆய்வரங்குகளை ஏற்பாடு செய்யக் கருதுகிறது. அதற்கு அந்தந்தச் சிறப்புத் துறைகளில் அறிவு பெற்றோர் அழைக்கப்படவுள்ளார்கள். முதல் ஆண்டுக்கு மூன்று மாதங்களுக்கு ஒருமுறை என, 4 அரங்குகளை ஏற்பாடு செய்ய, தமிழ் தகவல் நடுவம் உத்தேசித்துள்ளது.

இக்கருத்துக்கள் தொடர்பான ஆய்வு ஆவணங்களை விவரணப்படங்களுடன் திரையிடப்பட்டு, அவற்றின்மீது அறிஞர்கள் கருத்தையொட்டி விவாதங்கள் எடுத்துக்கொள்ளப்பட வேண்டுமென நடுவம் கருதுகிறது.

**வேர்கள்: 24 ஒகஸ்ற் 1997, பிற்பகல் 2.00 - 6.00**

**மதம், மொழி, கலாசாரம்: 26 ஒக்ரோபர் 1997, பிற்பகல் 2.00-6.00**

**காலனியம்: 25 ஜனவரி 1998, பிற்பகல் 2.00-6.00**

**தேசியம்; 29 மார்ச் 1998, பிற்பகல் 2.00-6.00**

தொடர்புகட்கு: TAMIL INFORMATION CENTRE, 0181- 514 6390

## கல்லூரிப் பூக்கள் 97

ITSS ( சர்வதேச தமிழ் மாணவர் மன்றம்) இன் முதலாவது கலாச்சார நிகழ்ச்சியாகிய கல்லூரிப் பூக்கள் 97 நவம்பர் மாதமளவில் நடைபெறவுள்ளது.

நாடகம், நடனம் மற்றும் க.பாலேந்திராவின் நெறியாள்கையில் அமைந்த கவிதா நிகழ்வு ஆகியன இடம்பெறவுள்ளன. இதில் பெறப்படும் பணம் தெல்லிப்பழை அநாதைகள் இல்லத்திற்கு அனுப்பி வைக்கப்படும். இங்கு அநாதைக் குழந்தைகளும் விதவைப் பெண்களும் பராமரிக்கப்படுகிறார்கள் என்பது யாவரும் அறிந்ததே


விபரங்களுக்கு :
eb 220@ city.ac.uk
ez 159 @city.ac.uk
sivasuth @dcs.kcl.ac.uk

# ENGINE TEC MOTORS

339C London Road, Mitcham, Surrey CR4 4BE

*We offer facilities*

- *Servicing,*
- *Clutches,*
- *Brakes,*
- *Car Electrics,*
- *Overhauls,*
- *All types of Repairs*
- *Pre MOT Checks*



சகலவிதமான கார் திருத்த வேலைகளையும்
நம்பிக்கையானமுறையிலும்,
குறுகிய கால நேரத்திலும் செய்து தரப்படும்.

**Contact: VEL or RAJAN**

**Tel: 0181 640 1230, Mobile: 0860 770945, 0860 226476**

www.padippakam.com



# அறியாமை இருள்

கே.எஸ்.துரை

'மனிதகுலம் இரண்டாயிரமாவது ஆண்டை உருப்படியாகச் சந்திக்க முடியுமா?' என்ற ஏக்கத்துடன், இந்த நூற்றாண்டு தனது இறுதி நாட்களை எண்ணிக்கொண்டிருக்கிறது. ஒரு நூற்றாண்டில் இரு பெரும் உலக யுத்தங்களைச் சந்தித்துவிட்ட களைப்பு. மானுடம் தானே தன்மீது இரண்டு அணு குண்டுகளை வீசிப்பார்த்த குருரம், அணு ஆயுத யுத்தமொன்றை ஏற்படுத்தி உயிர்ப்பூண்டை வேரோடு நாசமாக்க உலக நாடுகள் தமக்குள் வரிந்து கட்டி நிற்கும் கொடுமைகளென இந்த நூற்றாண்டு தான் பெற்ற மனிதர்களால் காயப்பட்டு நிற்கிறது. முதல் இரண்டு யுத்தங்களையும் ஆரம்பித்து வைத்த பெருமைக்குரிய மேலைத்தேயத்தவர்கள், இரண்டாவது உலக யுத்தத்தை நடத்தாமல் தவிர்த்து, அதன் மூலம் அழிந்துபோன செல்வங்களை மனிதகுல மேம்பாட்டிற்காக பயன்படுத்தியிருந்தால், இன்று உலகில் ஒருவர்கூட அகதியாக இருந்திருக்கவேண்டிய தேவை யில்லை. உலகம் முழுவதுமுள்ள ஒவ்வொரு குடும்பத்திற்கும் ஐந்து அறைகள் கொண்ட வீடும், ஒவ்வொரு சிறு நகரத்திற்கும் ஒவ்வொரு பிரதான வைத்தியசாலையையும் அமைத் திருக்க முடியுமென ஆய்வுகள் கூறுகின்றன. இதுவே இரண்டாம் உலக யுத்தத்தை முடித்துக்கொண்ட பின் உலகம் கண்டு பிடித்த அரிய உண்மையாகும். இந்த உண்மைக்குள் மறைந்து கிடக்கும் அவலத்தின் மறுபெயரே அறியாமை யாகும். மண்ணிலிருந்து மனிதன் வரை சகல அவலங்களுமே இந்த அறியாமை என்னும் இருட் சுனையிலிருந்தே ஊற்றெடுத்து வருகின்றன.

தற்போது மனிதனுக்குத் தெரிந்துள்ள அதிகூடிய வேகம் ஒளியினுடையதாகும். இந்த வேகத்துடன் பயணம் செய்தால் சூரியனை அடைவதற்கு சுமார் எட்டு நிமிடங்கள் வரை எடுக்கும். இதுவரை அண்ட வெளியில் நாம் கண்டறிந்துள்ள கடைசி நட்சத்திரத் தொகுதியை நோக்கி ஒளியின் வேகத்துடன் பயணம் செய்தால், அதைச் சென்றடைய பத்துக் கோடி ஒளி வருடங்கள் செல்லும். ஆனால் ஒரு முழு ஆயுள் கொண்டுள்ள மனிதனின் இதயம் துடிக்கக்கூடிய மொத்த எண்ணிக்கையோ ஆகக்கூடியளவு முப்பந் தைந்தரைக் கோடி தடவைகள் மட்டுமே. இவ்விரு விடயங்களையும் ஒப்பிட்டுப் பார்த்தபின் அறிஞர்கள், "எல்லையற்ற பிரபஞ்ச வெளியில் மனிதன் இருந் தாலும் ஒன்றுதான், இல்லாவிட்டாலும் ஒன்றுதான்!" என்று குறிப்பிட்டனர். இப்படிப்பட்ட முடிவற்ற இருட் பெருவெளியிலே சில சிம்னி விளக்குகளை ஏற்றிக் கொண்டது போலவே, மனிதகுலம் இதுவரை அறிந்து கொண்ட சங்கதிகள் உள்ளன. எனவேதான் அறியாமை என்பதே மனிதகுலத்தின் முன்வைக்கப்பட்டுள்ள மகத்தான சவால் என்பதை நாம் மறந்து விடலாகாது.

புவிமீது படைக்கப்பட்டுள்ள எந்தவொரு உயிரினத்தின் அமைப்பும், அவற்றின் அகபுற வடிவங்களும் பத்து இலட்சம் வருடங்களுக்கு மட்டுமே நிலைத்திருக்க வல்லவை. அதன்பின் அந்த வடிவம் முற்றாக மாற்றமடைந்து விடும். இதுவரை உலகில் தோன்றி மறைந்துள்ள உயிரினங்களின் வரலாற்றில் இந்த உண்மை புதைந்து கிடக்கிறது. ஆனால் மனிதன் என்ற உயிரினம் மட்டும் இந்த அடிப்படை விதியை உடைத்துக்கொண்டு, இன்றுவரை முப்பது இலட்சம் வருடங்களாக அழியாமல் இருந்து வருகிறது. காலத்தின் மாற்றத்தால் அழிந்து போகாத மனித வடிவம் புவிமீது நிலைத்து நிற்க, ஆதார விசையாக அமைந்தது அவனது அறிவாகும். ஆரம்ப மனிதனின் மூளையின் மொத்தக் கொள்ளளவு 400 கமீ ஆகும். ஆனால் இன்றைய மனிதனின் மூளையின் மொத்தக் கொள்ளளவு 1400 கமீ ஆகும். அமைப்பால் வேறு படாது, மூளையில் ஏற்பட்ட இத்தகைய அபார வளர்ச்சியே, மனிதன் என்னும் வடிவம் புவியில் இதுவரை மாற்றமடையாது இருக்க உதவியுள்ள தலைமைக் காரணியாகும்.

உலகம் பயன்படுத்திவரும் எந்தவொரு விஞ்ஞான உபகரணமும் வானத்திலிருந்து யாரும் போட்டதல்ல. அனைத்தும் கண்டுபிடித்தவன் மனிதனே. இந்தச் சாதனங்கள் அனைத்துமே இயற்கைக்குள்தான் ஒழிந்து கிடந்தன. அவற்றைத் தேடி இயற்கையிலிருந்து பிரித்தெடுத்து வைத்திருப்பதே அறிவுதான். எந்த மக்கள் குழுவிடம் இந்த இரகசியங்களைத் தேடிக் கண்டுபிடிக்கும் ஆற்றல் அதிகமாக இருக்கிறதோ, அவர்கள் வசமே உலகின் முதன்மையும் போய்விடுகின்றது. அமெரிக்காவும், நேட்டோ நாடுகளும் இன்று வரை தாம் கண்டுபிடித்த அதிமுக்கிய பிரபஞ்ச இரகசியங்களை வெளியிடாது பாதுகாத்து வருகிறார்கள். தமது எதிர்கால வெளிநாட்டுக் கொள்கைகளைத் தீர்மானிக்கும்போது இவ்விரகசிய அறிக்கைகளுக்கே பெரும் முக்கியத்துவம் கொடுக்கிறார்கள். இதன் அடிப்படையில் உளவு பார்க்கும் சட்லைட்டுக்கள், தமது செவ் அலைக்கதிர்கள் மூலம் உலகின் சகல நாடுகளிலும் பேசப்படுகின்ற முக்கியத்துவம் வாய்ந்த இரகசியங்களை அப்பொழுதே பதிவுசெய்து கொள்கின்றன. மேலும் இவர்களின் N.S.A. என்ற ஒரு பிரிவு, உலகத்தில் பேசப்படும் எல்லாவிதமான வான் அலை வரிசைகளையும் சேகரிக்கவும், அதேவேளை அவற்றில் ஒளிந்திருக்கும் சங்கேதக் குறியீடுகளைச் செம்மையாக மொழிபெயர்ப்பதற்குமான வல்லமையைப் பெற்றிருக்கிறது. ஒரு நிமிடத்திற்கு 200 மீட்டர் வேகத்துடன், ஆகாயத்தில் பறக்கும் விமானம் போலவே, இப்போது கடலின் அடிப்பகுதி ஊடாக ஆழ்கடல் விமானங்கள் சுழியோடிச் செல்கின்றன. இத்தகைய அறிவியல் வளர்ச்சி வளர்ந்த நாடுகளுக்கும், வளரும் நாடுகளுக்குமிடையில் நிமிடத்திற்கு நிமிடம் பேரிடைவெளியை உண்டுபண்ணி வருவதை நிரா கரித்துவிட்டு, நாம் வாழ்வை இருண்மைக்குள் சிறை வைத்திருத்தல் தவறாகும்.

'ஒரு மகத்தான விடயம் உச்சத்திலிருக்கும்போதே இன்னொரு மகத்தான விடயம் தோற்றம் பெற்றுவிடுகிறது!' என்ற வாசகத்திற்கேற்ப அடுத்த நூற்றாண்டின் அறிவியல் உலகம் இந்த நூற்றாண்டின் பல முக்கிய விடயங்களை கிடப்பில் போட்டுவிட்டு, தனது மகத்தான பிரச்சினையை வேறோர் இடத்திற்கு நகர்த்திவிடும் அறிகுறிகள், விஞ்ஞானத்தின் சகல படிமானங்களிலும் தெரிகிறது. இந்நிலையில் கீழைத்தேயச் சமூகமானது, விஞ்ஞான ரீதியாக வளர்ந்துவிட்ட உலகம் முன்னெடுக்கும் பாய்ச்சலுக்கு இணையாக தன்னையும் தயார்படுத்திக்கொள்ள வேண்டியது, காலத்தின் கட்டாயத் தேவையாகும். நம்மைச் சுற்றி மூடியிருக்கும் அறியாமை இருள் எத்தகையது, அதன் ஊற்றுக்கண் எங்கிருக்கிறது, என்பதை அறிவியல் ரீதியான தேடலுக்கு உட்படுத்த வேண்டும். அப்போதுதான் நாம் நமது அறிவுக் கதவுகள் மீது போடப்பட்டுள்ள துருப்பிடித்த பூட்டுக்களை ஒவ்வொன்றாக அடையாளம் கண்டு திறந்து கொள்ள முடியும். "தட்டுங்கள் திறக்கப்படும்!" என்ற வாசகத்தின் உட்பொருளும் இதுவே.

நம்மைச் சுற்றியுள்ள வாழ்வியல் சமூகப் பிரச் சினைகளுக்கும் அடிப்படைக் காரணி அறியாமையும், அறிய மறுத்தலுமேயாகும்.

"கஞ்சி குடிப்பதற் கில்லார் - அதன்
காரணங்கள் இவையென்னும் அறிவு
மில்லார்"

என்ற பாரதி பாடலில், இதற்கான இலகுவான தேடலொன்று தென்படுகிறது. மக்கள் கஞ்சிக்கு வழியில்லாமல் இருக்கிறார்களென்பது கவலை தரும் விடயமல்ல. அவர்கள் தங்களுக்குக் கஞ்சிகூடக் கிடைக்காமலிருப்பதற்குரிய உண்மைக் காரணங்களை அறிய முடியாமல் இருக்கிறார்களே, என்பதுதான் பெரும் கவலை தரும் விடயமாகும், இந்நிலைக்கு இப்பால், மேலும் தமது ஏழ்மைக்கும் வறுமைக்கும் கடவுளும் ஊழ்வினையுமே காரணமென்று எண்ணும் மக்களே இன்றும் உலகில் பெரும்பான்மையாக இருக்கின்றார்கள். இவர்கள் உணவுப் பிரச்சினையிலிருந்து, தம்மைச் சூழவுள்ள சகல பிரச்சினைகளுக்கும் ஊழ்வினையே மூலகாரணியென பிழைபட எண்ணி மருள்கிறார்கள். பிரச்சினைகளும் அவற்றின் தீர்வுகளும் அவை தோன்றிய புள்ளியிலேயே மறைந்துகிடக்க, மனிதர்கள் தங்கள் துன்பங்களுக்கான தீர்வுகளை அவற்றோடு சம்பந்தப்படாத இடங்களில் தேடி அலைகிறார்கள். என்பதைச் சுட்டிக்காட்ட வந்த வள்ளுவர், "கேடில் விழும் செல்வக் கல்வி" என்று வலியுறுத்தினார். "அறிவே மக்களின் அணிகலன்" என்றது அர்த்த சாஸ்திரம். "கற்றல் கேட்டல் உடையோரே பெரியோர்" என்றார் சம்பந்தர். "கற்றறியாதவன் ஏன் பிறந்தானென?" சமூகத்தின் மீது சாட்டை வீசினார் பிளேட்டோ.

எனினும் இத்தகைய காரணங்களைக் காட்டிக் கற்பது மட்டுமே அறிவுடைமை என்றும் மகிழ்ந்துவிட முடியாது. "அறிவு அற்றம் (அழிவு) காக்கும் கருவி" யாக இருக்க வேண்டும். அது இல்லாத கல்வியால் மனித உயிருக்கு பாதுகாப்புக் கிடையாது. ஈழத்தமிழினம் தமது கடந்தகாலக் கல்விமுறைமையில் மலிந்து கிடந்த பல்வேறு இடர்ப்பாடுகளை முழுமையாக அடையாளம் கண்டுகொள்ளத் தவறிவிட்டதை இங்கு சுட்டிக் காட்டலாம். சீதனச் சந்தையை இலக்காக வைத்து டாக்டர்களையும், பொறியியலாளர்களையும் உருவாக்குவதே கல்வியென்ற எண்ணத்தாலேயே மத்தியதர வர்க்கம் கவரப்பட்டிருந்தது. இவர்கள், கல்வியின் மற்றெல்லாப் பக்கங்களையும் தாழ்வுபட்ட செயலாகவே எண்ணி மாய்ந்தனர். இந்த முறைமையினூடாக உருவாக்கப்பட்ட டாக்டர்களிலும், பொறியியலா ளர்களிலும் 90 விழுக்காட்டினர், தற்போது தாய்நாட்டிலில்லை. 1983 யூலைக் கலவரங்களைச் சிங்களப் பேரினவாதம் கட்டவிழ்த்துவிட்டு, "போர் என்றால் போர்" என்று உறுதியாக அறிவித்த போது, இராணுவப் பயிற்சியைக் கல்வியோடு சேர்த் துப் பெற்றிராத நமது கல்விமுறை தாய்நாட்டை விட்டுப் புலம் பெயர்வதைவிட வேறு வழியற்ற கையறு நிலையில் தடுமாறி நின்றது. ஒரு நாட்டின் 18 வய துக்கு மேற்பட்ட குடிமக்கள் யாவருக்கும் இராணுவப் பயிற்சி கட்டாயமானது. இந்த அவசியத்தைத் தமிழ் மக்களுக்கு மத்தியில் சரியாக எடுத்துச் சொல்லத் தவறிய நமது பழைய அரசியல்வாதிகள் அனைவருமே பாண்டித்தியம் பெற்ற சட்டத்தரணிகளே!

பாடசாலை செல்லவேண்டிய வயதில் சுதந்திரப் போரை முன்னெடுத்துள்ள இன்றைய இளைய தலை முறையினருடன் கைகோர்த்துப் பணியாற்றவேண்டிய கல்விமான்களில் பெரும்பான்மையோர் வெளிநாடு களிலும் மதில்மேல் பூனைகளாகவும் இருப்பதன் காரணமென்ன? ஆரம்பத்திலிருந்தே நமது கல்விமுறையும், கல்வி பற்றிய தேடலும் இன்றைய நெருக்கடிகளை முன்னெதிர்வு கொண்டவையாக நடத்திவரப் படாமையே, இவர்கள் தூரவிலகி நிற்பதன் பிரதான காரணியாகும். ஆகவேதான் பொறியியலாளரும் டாக்டருமே போதுமென்று எண்ணிய சமூகத்தின் கரங்களில் சிங்களப் பேரினவாதம் இலவசப் பாடப் புத்தகங்களை வழங்கி தமிழினத்தின் மீதான தனது அறிவியல் கலாசார மோசடியைச் சாதுர்யமாக நிகழ்த் தியது. அதேவேளை பாதுகாக்கப்பட வேண்டிய யாழ். நூல்நிலையத்தையும் கச்சிதமாகத் தீ மூட்டியது. இதிலிருந்து வெளிப்படும் உண்மை, கற்பதால் மட்டும் அறிவு வருவதில்லை. சமூகத்தின் சகல வாழ்வியல் படிமானங் களையும் விரவிவராத கல்வியும் ஓர் அறியாமையின் சின்னமே, என்பதாகும். இக்கருத்தையே திருக்குறள், "கற்க கசடற" என்று நாசூக்காகக் கோடிட்டுக் காட்டியது.

எப்போது கற்றலும், கற்றல் மூலம் கண்டுபிடித்த உண்மைகளை மக்கள் மயப்படுத்துவதுமே சமூகத்தை அறிவார்ந்த நிலைக்கு நகர்த்திச் செல்லும் வழிமுறையாகும். ஒரு காலத்தில் தமிழரிடையே பிரபலம் பெற்றிருந்த சித்த வைத்தியக்கலை இன்று அழிந்தே போய்விட்டது. வல்லாரைக் கீரையை "சரசுவதி" என்றும் தாளிசபத்தையை "சைவம்" என்றும் மறை பொருளால் குறிக்க வேண்டியது அன்றைய சித்தர்களின் தேவையாக இருந்திருக்கலாம். இதுபோல ஏராளமான சித்த வைத்தியப் பாடல்களில் யாருக்குமே புரியாத இரகசியக் கருத்துக்களையே மறைத்து வைத்திருந்தமையால், அவ்வைத்தியக்கலையை நாம் இழந்து விட்டோம். சித்தர்களின் பல நல்ல கருத்துக்களை சமுதாயம் நிராகரித்து விட்டாலும், தாமறிந்த நல்ல விடயங்களை மற்றவருக்குத் தெரியவிடாமல் மறைத்து வைப்பதில் மட்டும், சமூகம் சித்தவைத்தியக் கொள் கையை சிறப்பாக கடைப்பிடித்து வருவது தெரிகிறது. ஏனெனில் மாணவரைச் சரியான வழியில் நெறிப்படுத்தும் துண்டுப் பிரசுரங்களோ, கல்வி வழிகாட்டும் உத்தியோகத்தர்களோ நமது கல்விமுறைமையில் சிறப் பாக அறிமுகமாகவில்லை. கடந்த காலங்களில் மேலைத்தேயப் புலமைப் பரிசில்களையும், உயர்கல்வி வாய்ப்புக்களையும் மேட்டுக்குடி மக்களே தமது பரம் பரைச் சொத்தாக்கினர். கீழ்த்தட்டு மக்களுக்கு இவைகள் எட்டாக் கனியாகவே இருந்து வந்தன. இவைகள் மூலம் அறியாமை, அறிய மறுத்தல் மட்டுமல்ல அறிய முடியாமல் தடுக்கப்ப்ட்ட அவலத்திற்குள்ளும் நமது இனம் சிக்கப்பட்டிருந்ததை நாம் வெளிப்படையாகவே அடையாளம் கண்டு கொள்ள வேண்டும்.

மேற்கண்ட மூன்று அடிப்படை விடயங்களிலிருந்தே நம்மைச் சூழ்ந்துள்ள சகல பின்னடைவுகளும் ஊற்றெடுத்து வரு கின்றன. இந்த இருட்துயரை வெற்றி கொள்ளும் ஒளியை உருவாக்கும் வல்லமை அறிவுக்கே இருக்கிறது. அள்ளும்போது பெருகி, அள்ளாதபோது குறைந்துவிடும் கோட்பாட்டில் இயங்குவது, அறிவு ஒன்று மட்டுமே. வேறெந்தப் பொருளுக்குமே இத் தகைய வல்லமை கிடையாது. வளர்ந்து செல்லும் அறிவைக் கொண்டவரே தம்மிட முள்ள குறைகளைக் கண்டுபிடித்து விடு தலை பெற முடியும். நாம் பெரிதாக எண்ணுவதுபோல மனித உடல் பெறுமதி வாய்ந்ததொன்றல்ல. ஒரு முழு மனித உட லில் உள்ள ச்ரியான பெறுமதி, ஒரு சதுர மீட்டருக்கு வெள்ளையடிக்கப் போது மான சுண்ணாம்பு, ஒரு சில கிராம்கள் இரும்பு. சிறிதளவு தீப்பெட்டிக் குச்சுகளில் தடவக்கூடிய மருந்து, சொற்பமான கரி பெறுமதியற்ற பல லிட்டர் நீர் ஆகிய வையே. இவற்றின் மொத்தப் பணப் பெறு மதி ஐந்து டனிஷ் குறோணர்களுக்கு குறைவானதே. உலகின் மாபெரும் மனித னின் உடலாகட்டும்; சாதாரண முகவரியற்ற பிச்சைக்காரனின் உடலாகட்டும் இப்பெறு மதியில் பேதம் கிடையாது. பேதம் விளை மதிப்பற்ற அறிவால் மட்டுமே தோன்றும் தாயின் கருவில் மனிதன் உருவாகும்போது முதன்முதலாக இரப்பர் போன்ற சிறு பொருளாகவே மனித ஜனனம் நடைபெறு கிறது. இச்சிறு துணிக்கையே மனிதனி அடி மூளையாகும். இதற்குள் மறைந்தி ருப்பதே ஜீவ அணுவாகிய உயிர். இங்கி ருந்து புறப்படும் விசை யினால்தான் குழ ந்தையின் மற்ற அவயவங்கள் யாவும் ஒவ் வொன்றாகத் தோற்றம் பெறுகின்றன. இவ் விதம் அறிவிலிருந்து தோன்றியும்கூட மனி தன் அறிவுத் தரித்திரனாயும், சிந்தனைச் சோம்பேறியாகவும் இருப்பதே நமது வளர் சிக்குறைவின் அடிப்படைக் காரணியாகும்.

சர்வதேசச் சமூகத்தின் உயர்நிலை வளர்ச்சியோடு நாமும் இணைந்து வெற் றிபெற முடியும். மெய், வாய், கண், மூக்கு செவி போன்ற ஐம்புலன்களுக்குள் வைத்து வாழ்க்கையைத் தீர்மானிக்கும் இருட் சிறையிலிருந்து நாம் வாழ்வை மீட் டெடுத்தாக வேண்டும். விலைகொடுத்து வாங்கமுடியாத மேன்மை, ஒவ்வொரு மனி னிலும் மறைந்து கிடக்கிறது. அம்மேன் ஒருவனில் வெளிப்படும்போதே உலக அவனை மனிதனாகக் காணும். எம்ம என்ன செய்ய முடியுமென்பதை மனதி


(தொடர்ச்சி 15ஆம் பக்க



படிப்பகம்

www.padippakam.com






## சுவிஸின் சூரிச் மாநகரில்

# மிக அதிகாலை நீல இருளில் செட்டை கழற்றிய நாங்கள்




இந்த கோடை நாட்களில் மழை தூறுவதும் நிற்பதுமாக விளையாடிக் கொண்டிருந்தது. அந்த மஞ்சள் நிற மண்டபத்தின் வாயிலில் நின்று பார்ப்பதும் பின்னர் உள்ளே போவதும் வருவதுமாக சிலர் நின்று கொண்டிருந்தனர். நிகழ்ச்சி ஏற்பாட்டாளர்கள் என சட்டெனப் புரிந்தது. இரண்டு மணி அளவில் தொடங்குவதாக இருந்த நிகழ்ச்சி இன்னும் தொடங்கிய பாடாக இல்லை. நிகழ்ச்சி ஏற்பாட்டா ளர்களையும் அவர்களுக்கு நெருங்கிய ஒரு சிலரையும் தவிர ஏனையோரைக் காண வில்லை. இறுதியில் ஒருவாறாக நாலு மணியளவில் நிகழ்ச்சி தொடங்கியது. தொடங்கும் போது சுமார் முப்பதிற்கு மேற் பட்டோர் மண்டபத்தில் இருந்தனர். நிகழ்ச்சி ஒழுங்கு செய்தவர்களின் முகங்களில் ஓர ளவு திருப்தி கலந்த புன்னகை.

கடந்த 22.0697 அன்று சுவிஸின் சூரிச் மாநகரில் 'தமிழ் இலக்கிய ஆர்வலகம் சுவிஸ்' என்ற அமைப்பினால் ஏற்பாடு செய்யப்பட்ட கவிதை நூற்கள் அறி முக விழா பற்றிய சில விவரணங்களையும் கருத்துக் களையும் வாசகர்களுடன் பகிர்ந்து கொள்கிறேன்.

இந்த விழாவினை தமிழ் இலக்கிய ஆர்வலகம் ஒழுங்கு செய்ய விழாவிற்கு தலைமை வகித்தார் திரு. விவேகானந்தன் அவர்கள். சுவிஸில் வசிக்கும் ரவி எழுதிய 'செட்டை கழற்றிய நாங்கள்' எனும் கவிதைத் தொகுதியை விமர்சகரும் எழுத்தாளருமான யோகராஜா அவர்கள் மதிப்பீடு செய்திருந்தார். என் ஆத்மாவின் 'மிக அதிகாலை நீல இருளில்' எனும் கவிதைத் தொகுதியை திரு. அழகு குணசீலன் அவர் கள் மதிப்பீடு செய்திருந்தார். நோர்வேயில் இருந்து வருகை தந்த 'சக்தி' பெண்கள் சஞ்சிகையின் ஆசிரியரான தயாநிதி அவர்கள் முறையே சிவரமணி, செல்வி ஆகியோரின் கவிதைத் தொகுதிகளை அறிமுகப்படுத்தி உரையாற்றினார்.

தலைமை வகித்த திரு. விவேகானந்தனது குரல் ஆளுமையாலும் மேடை ஆளுமையாலும் கேட்போரை தன் ஆளுகைக்குள் வைத்திருந்தது விழாவை சிறப்பிக்க பெரிதும் உதவியது. அவர் தனது தலைமையுரையில் விழாவின் முக்கியத்துவம், அதன் நோக்கம், அதன் ஒழுங்கு செய்தவர்களின் நோக்கம் என்பனவற்றை தானே கேள்விகள் கேட்டு சிறப்பாக விளக்கமும் அளித்தார்.

அவர் கூறியதாவது "நான் இந்த விழா வினை ஒழுங்கு செய்தவர்களைப் பார்த்து இதன் நோக்கம் என்ன என்று கேட்ட பொழுது (ஏனெனில் எந்த நோக்கமும் இல் லாமல் செயல் இருக்கக்கூடாது) அவர்கள் கூறி னார்கள். "சமுதாயத்தில் அங்கத்துவம் பெற்றிருக்கும் நாங்கள் இந்த சமூகத்தைப் பார்த்து! அதனுள் இருந்து கொணர்டே அதனைக் குறை கூறி வாழ்வதிலும் பார்க்க அதனுள் இருந்து கொண்டே அதன் குறைகளைத் தீர்ப்பதற்கு எங் களால் முடிந்த ளவு உதவ முடியுமா? உதவ முடியும் என்ற நம்பிக்கையின் அடிப்டையில்தான் இந்த விழா ஆரம் பிக்கப்பட்டது. அது தான் எங் களுடைய நோக்கம்" எனக் குறிப்பிட்டார்கள்." மேலும் திரு. விவேகானந்தன் கூறுகையில் "இன் றைய கவிதைத் தொகுதிகளின் படைப்பாளிகளில் ரவி இந்த இடத்தில் இருக் கிறார். இருவர் இன்று இல்லை. ஒருவர் இந்த இடத்தில் இல்லை. இந்தச் சூழ் நிலையில் இந்தக் கவிதைத் தொகுப் புக்களை அறிமுகம் செய்வதன் நோக்கம் என்னவென்றால் படைப்பாளிக்குரிய உரி மைகள் அந்த படைப்பாளியின் சிந்த னைகள் இருட்டடிப்புச் செய்யப்படக் கூடாது. காரணம் படைப்பாளியின் சுதந் திரத்தை, படைப்பாளியின் சமூகமான உணர்வுகளை மற்றவர்கள் வாய்ப்பு வசதி உள்ளவர்கள் அவர்களுக்கு உற்சாக மளித்து ஊக்கம் கொடுத்து சமுதாயத்தில் உலாவ விடவேண்டுமே அன்றி அவர் களை ஒரு கட்டுப்பாட்டுக்குள் வைத் திருந்து, இருட்டடிப்புச் செய்து இல்லாமல் செய்யக் கூடாது. இந்த வகை யில் சமுதாயப் பிரஜையாக இருந் துகொண்டு சமூகத்திற்கு நாங்கள் செய் யும் தொண்டு இதுதான்". என திரு. விவே கானந்தன் விழா ஏற்பாட்டா ளர்களின் நோக் கத்தை அழகாக வெளியிட் டார்.

அடுத்து சிவரமணி, செல்வி ஆகியோ ரின் கவிதைத் தொகுதிகள் எடுக் கப்பட்டன. இரண்டு பெண் கவிஞர்களும் இன்று உயிருடன் இல்லை. இருவரி னதும் கவிதைகளை மிக அண்மையில் தாமரை செல்வி பதிப்பகம் ஒன்றாகச் சேர்த்து வெளியிட்டுள்ளது. இவர்களின் கவிதைகளை பெண்கள் சஞ்சிகையான சக்தி ஆசிரியர் தயாநிதி அவர்கள் அறிமுகப்படுத்தி உரையாற்றியது மிகப் பொருத்தமானதே.

திரு. யோகராஜா அவர்கள் ரவியின் செட்டை கழற்றிய நாங்கள் பற்றிய மதிப் பீட்டை செய்யும் போது "தற்காலத்தில் கவிதைகள் படைப்பவர்களிடம் சோலைக் கிளியின் தாக்கம் வெளிப்படுகின்றது" என்றும் அதன் தன்மைகளை ரவியின் செட்டை கழற்றிய நாங்களிலும் காண முடி கிறது. அத்துடன் நம்பிக்கை, வறட்சியை விதைக்கும் தன்மை அவரது பெரும் பாலான கவிதைகளில் காணக் கிடைக்கின்றது. ஆயினும் ரவியின் தனித் துவம் அவரது சொல்லாட்சியில் இருக் கின்றது. இதன் மூலம் அவர் தமிழுக்கு அரிய சொற்களை புகுத்திஇருக்கின்றார். அவரிடம் காணப்படும் கட்டுடைப்புச் சிந்தனை அவரது கவிதைப்புனைவிற்கு தடையாக இருக்கின்றது. கட்டுடைப்புச் சிந்தனை அரசியல் கட்டுரைகளுக்கு உதவலாம். ஆனால் கவிதைக்கு உதவுவதாகத் தெரியவில்லை என்றும் குறிப்பிட்டார். நம்பிக்கை ஊட்டும் கவிதைகளுக்கு ஜெயபாலன் போன்ற கவிஞர்களின் கவிதைகளை யோகராஜா அவர்கள் உதாரணம் காட்டிப் பேசிய போது பொருத்தமாக இருந்தபோதும், ரவி யின் சிறந்த கவிதைகளையும் இதற்கான விளக்கங்களையும் அளித் திருப்பாராயின் அவரது மதிப்பீடு இன்னும் சிறப்பாக அமைந்திருக்கும்.

அடுத்து N ஆத்மாவின் 'மிக அதி காலை நீல இருளில்' கவிதைப் படை ப்பை திரு. அழகு குணசீலன் எடுத்துக் கொண்டார். என்.ஆத்மா வளர்ந்து வரும் இளம் கவிஞர். அத்துடன் அவர் முஸ்லீம் சமூகத் தைச் சேர்ந்தவர். கிழக்கு மாகா ணத்தில் மட்டக்களப்பு பிரதேசத்தைச் சேர்ந்தவர். ஆகவே அதே பிரதேசத்தைச் சேர்ந்த அழகு குணசீலன் N. ஆத்மா வின் கவிதைத் தொகுதியை விமர்சன த்திற்கு எடுத்துக் கொண்டது சிறப்பான விடயமே.

அந்த பிரதேசத்தைச் சேர்ந்தவன் என்ற முறையிலும் அம்மக்களின் மொழி வழக் குகளுடன் பரிச்சயமுள்ளவன் என்ற வகை யிலும் தான் மிக ஆர்வத்துடன் இந்த மதிப்பீட்டுப் பணியினை ஏற்றுக் கொண் டதாகவும் அத்துடன் தமிழ் கவிதை உலகுக்கு முஸ்லீம் சமூகத்தில் இருந்து பலர் சிறந்த பங்களிப்புக்களை வழங் கியுள்ளதால் என். ஆத்மாவையும் தான் மிகுந்த எதிர்பார்ப்புடன் வாசித்ததாகவும், தனக்கு பெருமளவில் ஏமாற்றமே மிஞ்சியது எனவும் அழகு குணசீலன் குறிப்பிட்டார். இருந்த போதும் N. ஆத்மா வளர்ந்து வரும் இளம் கவிஞர் என்ற முறையில் அவருக்கு எதிர்காலம் உண்டு. இதை அவர் தனது அகவளர்ச்சியினூடாக தக்க வைத்துக் கொள்வாரா என்பதை காலம் தீர்மானிக்கும் என்ற பொருள்படக் கூறினார். அழகு குணசீலனின் மதிப்பீடு மிகுந்த சர்ச்சைக்குள்ளானது. முஸ்லீம் மக்களுக்கு மேல் போராளிகளால் இழைக் கப்பட்ட அநீதி பற்றிய கவிதையாகும். இது பற்றி கேட்போர் அரங்கத்தில் பலர் முரண்பட்டதைக் காணக் கூடியதாக இருந்தது. அரசியல் அடிப்ப டையில் முஸ்லீம் மக்களுக்கு மேல் இழைக்கப் பட்ட அநீதிகளை தான் எதிர்ப்பதாகவும் ஆனால் ஒரு கவிஞன் இவற்றை எல்லாம் கடந்து (குறுகிய இன உணர்ச்சியை) நிற்க வேண்டும் என்றும் ஆனால் N.ஆத் மாவின் அந்தக் கவிதையில் குறுகிய இனவுணர்ச்சியே வெளிப்படுகிறது என் றும் இதனால் அந்த கவிதைகள் காலத் தால் நிலைத்து நிற்காமல் போய்விடும் என்றும் குறிப்பிட்டார். தமிழ் கவிதை உலகு காசி யானந்தன் போன்றோர்க்கு வழங்கிய இடத்தையே N.ஆத்மாவிற்கும் வழங்கி விடலாம் என்றும் குறிப்பிட்டார். ஈழத்து முஸ்லீம்கள் பலரது கவிதை க்களை இதற்கு மாற்றாக உதாரணம் காட் டினார். N. ஆத்மா வின் காதல் கவிதை களுக்கு சிறந்த எதிர் காலம் உண்டு என்றும் குறிப்பிட்டார்.

இடைவேளைக்குப் பிறகு கவிஞர் ரவி அவர்கள் மதிப்பீடுகள் சம்பந்தமான தனது பதில்களை வழங்கினார். இறுதி யாக கலந்து ரையாடல் இடம்பெற்றது. இதில் N. ஆத்மாவின் கவிதைகள் பற்றிய விவாதம் அர சியல் விவாதமாக மாறிவிட் டதை தவிர்த் திருக்கலாம். இது விழா வின் நோக்கத்திற்கு இடையூறு பண் ணியதாக பார்வையாளர் பலர் அபிப்பி ராயப்பட்டனர். இத்தகைய சமகாலப் படைப்புக்களில் அரசியல் நெடி வீசும் போது அதனை முற்றிலும் தவிர்க்க முடி யாது என்றபோதும் கூடுதலாக அந்தப்ப க்கம் சாயாமல் பார்த்திருக்கலாம். அழகு குணசீலனின் கருத்துடன் முரண்பட்ட பலரது அபிப்பிராயம் N. ஆத்மா தனது சமூகத்திற்கு இழைக்கப்பட்ட அநீதியைப் பற்றிய தனது உணர்வை பாசாங்கு இல் லாமல் வெளிப்படுத்தி இருக்கிறார் என் பதே.

சுருக்கமாக சொல்வதானால் படைப்புக் களைப் பற்றிய விமர்சனங்களை சுற்றி வளைத்துப் பேசாமல், முதுகு சொறியல் இல்லாமல் வெளிப்படையாகவும், சுதந் திரமாகவும் முன்வைத்தது ஒரு ஆரோக் கியமான விடயமே. குறிப்பாக ஒரு படைப் பாளியை நேரே வைத்துக் கொண்டே இலக்கிய நோக்கில் கறாராக விமர் சிப்பதும் படைப்பாளியும் அதனை உள் வாங்கி செரிப்பதும் எதிர் கால வளர்ச்சிக்கு தேவையான விடயங்களே. இத் தகைய விமர்சன இயக்கங்கள் வளர்ச்சியு றுவதன் மூலம் படைப்புத்துறை வளர்ச்சியடை வதும் அதன் மூலம் மீண்டும் விமர்ச னத்துறை வளர்ச்சியுறுவதும் என்ற போக்கு ஆரோக்கியமான சமூக வளர்ச்சிக்கு அவசியமான பங்களிப்புக்களே. அந்த வகை யில் பல சிரமங்களுக்கு மத்தியில் இதனை ஒழுங்கு செய்து நடாத்திய 'தமிழ் இலக்கிய ஆர்வலகம்– சுவிஸ்' அமைப்பினரின் முயற்சி பாராட்டத்தக்கதே. நன்றியுரையில் அவர்கள் கூறியது போல் " இந்த இயந்திரமயமான வாழ்க்கைச் சூழலில் வாசிப்புப் பழக்கம் என்பதே அருகி வரும் சூழலில் இலக்கிய ஆர்வலங்கள் கூட முடங்கிப் போய்விடு கிறார்கள். இலைமறை காய் போல் உள்ளார் கள் எத்தனையோ படைப் பாளிகள். திற மையிருந்தும் பலர் சமூக அங்கீகாரம் இன்றி காணாமல் போய விடுகிறார்கள். இவர்களுக்கு உற்சாகம் அளிக்க இருந்த சிறு பத்திரிகைச் சூழலும் இன்று தேங்கி இல்லாமல் போய்விட்டது. இந்நிலையில் அத்தகைய படைப்பா ளிகளின் படைப்புக்க ளுக்கு சமூக முக்கி யத்துவம் உள்ள படை ப்புக்களுக்கு முதன்மை அளிப்பது நல்ல விடயம். இந்நிகழ்வுகள் தொடருமா? தொடரும் என அவர்கள் கூறியது மனதுக்கு சந்தோசமளிக்கின்றது.

-அரிகழபுத்திரன்

# எண்ணியதை எண்ணியபடி எழுதுகிறேன்

**காயத்திரி கொன்ஸ்டன்ரைன்**

இற்றைக்கு நான்கு வருடங்களிற்கு முன்பாக, லண்டனில் பல தமிழ் பத்திரிகையாளர்கள், எழுத்தாளர்கள் ஒன்றுகூடி எல்லோரும் எவ்வாறு ஒரு பொதுவான வேலைத்திட்டத்தை நோக்கி செயற்படுகிறார்கள் என கருத்துப் பரிமாறிக் கொண்டிருந்தார்கள். அதில் கலந்து கொண்டிருந்த அனைவரும் ஈழத்தமிழர்களின் பிரச்சனைக்கு சுயமான ஆட்சியைத் தவிர வேறு ஒரு வழியும் இல்லை என்ற கருத்தை தமது பாணியில் கூறிக் கொண்டிருந்தனர். வழமைபோல் விடுதலை இயக்கம் பற்றியும், தமிழ் அரசியல் கட்சிகளின் பங்களிப்புத் தொடர்பாக கருத்துக்கள் தெரிவிக்கப்பட்ட போது பாரிய வேற்றுமைகள் ஒலித்தன. இந்த கருத்து வேற்றுமை எல்லாவற்றையும் சுமூகமாக தீர்க்கப்போகிறேன் எனக் கருதிக் கொண்டு ஒரு நண்பர் தனது கருத்தை மிகவும் அழுத்தமாகவும், ஆதாரங்களுடனும் விபரித்துக் கொண்டிருந்தார். சிங்கள அரசியல் வாதிகளும் அவர்களின் படைகளும் எவ்வாறு திட்டமிட்ட முறையில் தமிழீழப் போராட்டத்தை நசுக்கி வருகின்றது என்பதை விபரித்துக் கொண்டிருந்தார்.

இடையில் குறுக்கிட்டார் லண்டனில் வெளியாகின்ற ஆங்கில சஞ்சிகை ஒன்றின் எழுத்தாளர் ஒருவர் "ஐசே! எனது ஒரு கேள்விக்கு மட்டும் பதிலை தந்துவிட்டு மிச்சத்தை பேசும்" என்று ஒரு போடு போட்டார்.

"இற்றை வரையிலும் சிங்கள படையினரால் கொலை செய்யப்பட்ட ஒரு முக்கிய தமிழ் அரசியல் வாதியுடைய அல்லது விடு தலை இயக்கமொன்றின் தலைவரின் பெயரை சொல்லும் பார்ப்போம்" என்றார் அவர். பேச்சாளர் உட்பட அனைவரும் சற்று மௌனமானோம். கொஞ்ச நேரம் ஈயாடவில்லை. கேள்வியாளர் தொடர்ந்து கூறினார் "தர்மலிங்கத்தை சுட்டது யார்? அமிர்தலிங்கத்தை சுட்டது யார்? சுந்தரத்தை சுட்டது யார்? சந்ததியாரை சுட்டது யார்? ஸ்ரீசபாரத்தினத்தை சுட்டது யார்? பத்ம நாபாவை சுட்டது யார்? மனோ மாஸ்டரை சுட்டது யார்? TIC கந்தசாமியை சுட்டது யார்?...... ஏதோ இராணுவம் மட்டும் தான் அநியாயம் செய்கிறது. நாங்கள் எல்லோரும் போச்சியில் பால் குடித்துக் கொண்டிருக் கிறோம் என கதை விடவேண்டாம்" என்று போட்டாரே ஒரு போடு. சிந்திக்கத் தெரியாத அல்லது முடியாத பத்திரிகையாளனையும் அந்தக் கேள்வி சிந்திக்க வைத்து விட்டது. நான்கு வருடத்திற்கு முன்பாக மிகவும் பொருத்தமாக இருந்த இந்த யதார்த்தம் இன்றும் எமக்கு பொறுந்திக் கொண்டு தான் இருக்கிறது. கடந்து வந்த பாதையில் நாம் படித்த பாடம் என்றுமே இல்லை போல் தெரிகிறது. கடந்த மாதம் திருகோணமலையில் வைத்து கோரத்தனமாக கொலை செய்யப்பட்ட தங்கத்துரையின் கோரக்கொலை நயவஞ்சகமானது. கோழைத்தனமானது. இக் கொலையில் சம்பந் தப்பட்டவர்கள் தமது நியாயத்தை இது வரையிலும் வெளியிடவில்லை. தாங்களே குற்றத்தை சுமத்தி தாமே விசாரித்து தாமே மரண தண்டனை விதித்துவிட்டு குற்றத்தைக் கூட வெளியில் கூறாமல் இருக்கும் 'சட்ட தேவதை' ஈழத்தில் மட்டும் தான் உலாவிக்கொண்டிருக்கிறாள் போலும்!!

ஈழப்போராட்டம் இதுவரையிலும் ஒரு முழுச் சந்ததியினரை சிதறடித்துவிட்டது. இனிவருகின்ற சந்ததிகளும் இவ்வாறு சிதறடிக்கப்பட்டே போகுமாயின் எங்களுக்கு தனிநாடும் தேவைப்படாது. அதில் வாழ மக்களும் எஞ்சியிருக்க மாட்டார்கள்.

இரண்டாம் உலக மகா யுத்தத்தின் போது நாடு விட்டு நாடாக விரட்டி அடிக்கப்பட்ட யூத மக்கள் இன்று பல்வேறு நாடுகளில் சிதறப்பட்டுள்ள போதிலும் தமது இஸ்ரேலிய தாய் நாட்டை இன்று மிகவும் பெருமையுடன் திரும்பிப் பார்த்து பெருமையடைகிறார்கள். நாங்கள் தொடர்ச்சியாக எம்மவர்களையே சுட்டு எங்களையே குட்டிச் சுவராக்கிக் கொண்டிருந்தால் யாழ் கோட்டையில் தொடர்ந்தும் சிங்கள பௌத்த கொடி தான் பறந்து கொண்டேயிருக்கும். தமிழர்கள் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் பெரும்பாண்மையாக வாழ்ந்தார்கள் என்று சரித்திரம் மட்டும் தான் பறை சாற்றும்.

## எதிரொலி

எங்கள் மேல் திணிக்கப்படும்
முகங்களின் மேல் வீசப்படும்
அடையாளங்களையும்
வேஷங்களையும்
இந்த சமூகத்திடமே
திருப்பி எறிகிறோம்
எங்களை இரையாக்கி
கொழுத்த கலாச்சாரத்தை
வளர்த்த பின்
உங்கள் முன் குவிந்திருப்பவை
உடைந்த மண்டை ஓடுகளும்
உக்கிப் போன மனித
உடல்களுமே

கைவிலங்குக்ளை உடைக்க
முற்பட்டவர்களின்
முழஙடகாலட சில்லுகளையும்
முள்ளந்தண்டுகளையும்
நீங்கள் சிறை வைத்திருக்கலாம்
எனினும்
உங்களிடமே திருப்பி எறிகிறோம்
நரைத்த தலையும்
வெத்திலை துப்பல்களும்
எத்தனை காலம்
வரலாறு எழுதுவது
அனுபவங்களை ஒப்பியுங்கள்

எழுதுவோம்
முழுமையான ஒரு சகாப்தம்
அடிமைகளை உருவாக்கும்
சுரண்டல் சமுகத்தை மாற்றி
மனிதத்தை பாதுகாக்கும்
தோழமையான உலகத்தை
அமைப்போம்

எம் சமூக அமைப்பில் பெண்கள் பல ஊடகங்களால் ஒடுக்கப்படுகின்றனர். சமூகத்தில் வாழும் ஒவ்வொரு நபரும் இக்கலாச்சாரத்திற்கு பாதுகாவலர். நியாயத்தை நிலைநிறுத்த வேண்டிய சமயங்கள் இலக்கிய இதிகாசங்கள் மக்களை மனோரீதியாக கட்டுப்படுத்தி வைத்துள்ளது. இச்சமூகத்து பழமைவாதிகள் கை விலங்குகளின் சாவிக்கொத்தை தர மறுப்பது மேலும் வேதனையானது.

பாமதி (கனடா)

Raj Puspanandan

ATOL 74234
IATA 91245770

TRUST TRAVEL LIMITED
3RD FLOOR
205 WARDOUR STREET
LONDON W1V 3FA
ENGLAND

TEL: 0171 287 3200
FAX: 0171 287 3111

www.padippakam.com


# ஒரு ஜூலை

நினைவிருக்கிறதா உங்களுக்கு?

எண்பத்து மூன்றில்
எங்கள் இரத்தம்
கொதித்ததும்
வெலிக்கடைச் சிறையின்
வேலிகள் தானாய்த் திறந்ததும்
விடியல் தேடிய
வாலிபப் பயிர்கள்
ஐம்பத்து மூவரை
சிங்களக் காடையர்
சிதைத்து மிதித்ததும்
உயிர்நாடி துடிக்க
கண்களும் கால்களும்
அங்கங்களாக
அறுத்து எறிந்ததும்

அதனைத் தொடர்ந்து
ஆயிரம் இடிகள்
விழ்ந்தது தலையில்
இருபதாம் நூற்றில்
இனக்கொலை நடந்தது
இலங்கையெங்கிலும்

தலைநகர் கொழும்பிலே
கோடுகள் போட்டு
தமிழரின் இருப்புக்கள்
கொழுத்தப்பட்டன
தமிழ் பேசிய
குற்றத்திற்காகத்
தலைகள் உருண்டன

இனவெறியூட்டிய
இரண்டுகால் மிருகங்கள்
இழுத்துப் புணர்ந்தன
எங்கள் பெண்களை
இருகை வீசியெறிந்தன
களனி ஆற்றிலே
மொட்டுக்களைக் கூட
முகர்ந்து கசக்கி
தெருவில் வீசினர்
முதியோர் கூட
விதிவிலக்கல்ல

அன்றைய ஜூலையில்
கோவணமும் அறுத்து
கொலைக்களப் பயிராய்
புத்தனும் வெட்கி
கக்கத்துக்குள்
கைகளைச் சொருக
தெறித்தது இரத்தம்
போதி மரத்தின்
உச்சிக் கொப்பிலும்

ஆடியில் பெருக்கு
இயற்கையின் நியதி
செயற்கையின் விளைவோ
ஆடியின் பெருந்துயர்

ஆட்சியிலிருக்க
நீவிர் விதைத்த
இனவாதக்களை
பற்றிப் படர்ந்து
மென்னி நெரித்து
வயல்களை மூட
வெஞ்சினம் கொண்டு
சிலிர்த்து எழுந்தன
சிற்றினப் பயிர்கள்

இவ்வாறாகத்
தொடங்கிய வேள்வி
இலங்கைப் படத்தை
இருகோடிட்டது
இன்று வரைக்கும்
தொடரும் யுத்தம்
களைகளின் அலுப்பே

S.ரகுபதி 9 ஜூலை 97

## ஹிற்லர் டயறிகள்

*இலங்கை 1983 ஒகஸ்ட்*

*ஹிற்லர் டயறிகள்*
*அண்மையில் வந்தவை போலிகள்*
*உண்மை, ஆனால்*
*ஹிற்லர் டயறிகள்*
*செயலாய் நிஜமாய்*
*இன்னுந் தொடர்ந்து எழுதப்படுவன*

*இன்று இந்த இலங்கை மண்ணில்*
*ஹிற்லரின் சொற்கள் உயிர்த்துத்*
*தங்கள்*
*நிழலுரு நீங்கி நிஜங்களாவன*
*அக்னி தோய்த்து எழுதிய சொல்லாய்*
*எரியும் கடைகள் வீடுகள் மனிதர்*

*வெட்டுவாள்களும்*
*வெடித்துவக்குகளும்*
*வரிக்கு வரி கீழ்ச்செங் கோடிடுவன*

*இந்த மண்ணில்*
*தமிழர் வாழும் ஒவ்வொரு தெருவிலும்*
*வீடு தோட்டம் பள்ளிக்கூடம்*
*பல்கலைக்கழகம் பணிமனை கோயில்*
*பெருஞ்சிறைக் கூடம்-ஒவ்வோரிடத்தும்*
*குருதியும் தசையும் நிணமும்*
*எலும்பும்*

*தோலும் மயிரும் தாளாய் விரியும்*
*வாளும் துவக்கும் தீவட்டிகளும்*
*இனவெறி உந்தும் ஆயிரம் கைகள்*
*ஏந்த அழுத்தி எழுதிச் செல்லும்*

*திரையின் மறைவில் இருந்து இயக்கி*
*எரிகிற வீட்டில் விறகு பொறுக்கும்*
*அரசு முதலைக் கண்ணீர் உகுக்கும்*
*அல்லது புண்ணில் முள்ளால்*
*செதுக்கும்*

*துயர்நிறை நெஞ்சோடும்*
*மரத்தில்*
*நாம் ஒரு சின்னமெழுப்பினோம்...*

சி. சிவசேகரம்



# ஜூலையைப் பற்றி

நாடு சுதந்திரம் அடைந்த பின் சிங்களம் மட்டும் மொழிச்சட்டத்தின் விளைவு தமிழ் சிங்கள மக்களுக்குள் முதலாவது இனக்கலவர மாக 58ம் ஆண்டு தொடங்கியது. இக்கலவரம் தொடக்கம் நடந்தேறிய இனக் கலவரங்கள் யாவும் அரசு, அரச படைகளால் காலதாமதமாகியே கட்டுப்படுத்தப்பட்டன. 1983 கலவரம் ஜனாதிபதி ஜே.ஆர் பிரதம மந்திரி பிரேமதாசா, மந்திரிகள், அரசாங்க கட்சி பாராளுமன்ற உறுப்பினர்கள் முன்னின்று நடத்தி சிங்கள அரசால் தமிழ் மக்களுக்கு பாதுகாப்பு இல்லையென்று உணருமளவிற்கு தமிழ் மக்கள் மீது மிருகத்தனம் கட்டவிழ்த்து விடப்பட்டது. இக் கலவரத்தின் கொடூரம் தமிழ் மக்களின் போராட்டப் பாதையில் புதிய திருப்பத்தை தோற்று வித்தது.

1983 ஜூலை 23ம் திகதி கலவரம் தொடங்கு முன் திருகோணமலை, கிளிவெட்டி, மூதூர் பகுதிகளில் அரச படைகளின் உதவியுடன் இன வெறியாளர்களால் தமிழ் மக்கள் வெட்டியும், சுட்டும் கொல்லப்பட்டதுடன் படுகாயங்களுக்கும் உட்படுத்தப்பட்டனர். இச் செயல்களை தமிழ் பாராளுமன்ற அங்கத்தவர்கள் வன்மையாக கண்டித்து அரசிற்குத் தெரியப்படுத்தினர். ஆனால் செவிடன் காதில் சங்கூதியது போல் அரசின் நடவடிக்கைகள் இருந்ததுடன் சிங்களக் குடியேற்றங்கள் மூலம் வட கிழக்கைப் பிரிக்க அரசின் உள்நோக்கத்தை நடைமுறைப் படுத்துவதற்கு இச் செயல்களுக்கு ஊக்கம் அளித்தது. தமிழ் மக்கள் தாங்கள் நாளாந்த கடமைகளை கவனிக்க முடியாத அளவிற்கு பத ட்ட நிலை கொண்ட பிரதேசமாக் கப்பட்டது. இப்பிரதேச தமிழ் மக்கள் தங்களால் இயன்றளவு எதிர்ப்பு நட வடிக்கைகளில் ஈடுபட்டனர்.

வடகிழக்கில் அரசபடையினர் தமிழ் போராட்டக் குழுக்களினால் கொல்லப்பட்டால் தென்னிலங்கையில் அவ்வரச படையின் பிரேத ஊர்வலம் அப்பிரதேசத்தில் வாழும் தமிழ் மக்களுக்கு இன்னலைக் கொடுத்தோ அல்லது அச்சத்தை ஏற்படுத்தியோ அரசினால் ஊர்வலம் நடத்தப்பட்டது.

1983ம் ஆண்டு ஜூலை 23ல் விடுதலைப்புலிகளால் 13 இராணுவம் கொல்லப்பட்டதை சாட்டாக வைத்து சிங்கள மக்கள் அரசின் மீதுள்ள வெறுப்பை திசைதிருப்பவும் தனது அரசை தொடர்ந்து நடத்துவதற்கேற்ப சட்டங்களை உருவாக்கவும் முன் கூட்டியே படிப்படியாக வளர்த்து வரப்பட்ட இன வெறி வன்செயல்களை தனது தலைமையில் அரசு 83 கலவரத்தை நடத்தியது. இக்கலவரத்தின் போது வாக்காளர் பட்டியலில் பெறப்பட்டபடி தமிழர்களின் கடைகள், தொழிற்சாலைகள், உடமைகள் சூறையாடப் பட்டபின் எரிக்கப்பட்டன. இவ்வேளைகளில் தென் பட்ட தமிழர்கள் வெட்டியோ அல்லது அடித்தோ எரியும் நெருப்புக்குள் எறிந்தோ கொலை செய்யப்பட்டார்கள். தங்கள் உறவினர்கள் சித்திரவதைக்கு உட்படுத்தப்பட்டு கொலை செய்யப்பட்டதை நேரில் கண்டவர்கள் சித்தப்பிரமை பிடித்தவர்களாக ஆக்கப்பட்டார்கள். ஜனாதிபதி ஜே.ஆர் ஜயவர்த்தனா போர் என்றால் போர் சமாதானம் என்றால் சமாதானம் என்பதுடன் துட்டகைமுனுவையும் நினைவு கூரி கலவரத்தை தூண்ட வழிவகுத்தார். 1983 கலவரத்தில் தமிழ் மக்கள் ஒவ்வொருவரும் ஒரு வகையில் பாதிக்கப்பட்டனர். தமிழ் மக்கள் சொந்த நாட்டில் அரசாங்கத்தால் பாதுகாப்பு அற்றவர்களாக ஆக்கப்பட்டனர். வெலிக்கடை சிறைச்சாலையில் சக சிங்களக் கைதிகளால் சிறைக் கூடங்களை உடைத்து யூலை 25ம் திகதி 35 தமிழ் கைதிகள் பொல்லால் அடித்தும் இரும்புகளால் குத்தி குதறி மிருகத்தனமாக படுகொலை செய்யப்பட்டதை அரசு தமிழ் கைதிகள் சிங்களக் கைதிகளால் கொல்லப்பட்டனர் எனக்கூறி இவ்வின வெறிச் செயலைக் காப்பாற்றியது. ஆனால் ஜூலை 27 இலும் அதே சிறைச்சாலையில் 18 பேர் கொல்லப்பட்டனர். கொல்லப்பட்ட 53 கைதிகளின் சிறைக்கூடம் செல்வடிவங்களையும் பாதுகாவலரையும் கொண்ட பாதுகாப்பானது. இப்பாதுகாப்பான சிறைக்கூடத்தை எந்தவித சிரமுமின்றி திறப்பதற்கும் பொல், கூரான ஆயுதங்கள் கிடைப்பதற்கு யார் வழிவகுத்தார்கள் என்பதை அரசால் உலகுக்கு மறைக்க முடியாமல் போய்விட்டது.

தமிழ் மக்களின் இவ்வளவு இழப்புகளுக்கு எவ்வித பரிகாரமும் ஏற்படுத்தாமல் அரசு தமிழ் மக்களின் பாராளுமன்ற பிரதிநிதித்துவத்தையும் பறித்து தமிழ் மக்களை நிர்க்கதி ஆக்கியது. அரசின் இச்செயல் தமிழ் மக்கள் மீது உலகின் அனுதாப அலை ஓங்க வைத்தது. ஐரோப்பா, கனடா, இந்தியா போன்ற நாடுகள் அகதித்தஞ்சம் கொடுத்தன. அச்செயல்களால் பாதிக்கப்பட்டவர்கள் அரசிற்கெதிராக போராட்டம் செய்ய வேண்டும் என்ற உணர்வுடன் தம்மை போராட்டக் குழுக்களுடன் இணைத்துக் கொண்டனர். இத்திடீர் இணைவு போராட்டக் குழுக்களின் கட்டுமானங்களை ஆட்டம் காண வழிவகுத்தது. இத்தற்கால நிகழ்வை ஒழுங்கமைத்து மக்களையும் போராட்டத்தில் இணைத்துச் செல்வதற்கு முயற்சிக்காமல் தங்கள் குழுக்களின் எண்ணிக்கையில் பிரமிப்புக் கொண்டும் அந்நிய நாடுகளின் உதவியில் நம்பிக்கை கொண்டும் தம்மை அழித்துக் கொண்டனர்.

1983ம் ஆண்டு அனர்த்தங்களை நினைவு கூருவதுடன் மட்டுமல்லாமல் அரசின் இனவெறிச் செயல் பெரும்பான்மை இனக்கட்சிகளின் இனப்பிரச்சனைக்கு வைத்த தீர்வுகள் தமிழ் போராட்டக் குழுக்களின் பாதையில் நடத்திய நடத்திக் கொண்டிருக்கின்ற தில்லு முல்லுகள் கொலைகள், உட் கொலைகள் யாவற்றையும் நினைவு கூறுவதே பூரண நினைவு கூறுதலாக அமையும்.

# WELCOME CENTRE

தங்களின் சினிமா ஆவலினை உடனுக்குடன் பூர்த்தி செய்வதில்
தமிழ் மக்களின் மனதை விட்டகலா ஒரே ஸ்தாபனம்.

WELCOME CENTRE



நீண்ட பொழுதை
விரையம் செய்யாது இருந்திட
பிரபல எழுத்தாளர்களின்
புதிய, பழைய கதைப்புத்தகங்கள்
மிகக் குறைந்த விலையில்
வாடகைக்கு பெற்றுப் படித்திட
WELCOME CENTRE

WELCOME CENTRE

தரமான
தெளிவான
பழைய புதிய சினிமாப் படங்கள்
Video CD, CDக்கள் , Audioக்கள்,
வார, மாத தமிழ் ஆங்கில
பத்திரிகைகள், சஞ்சிகைகள்
மற்றும்
அனைத்துத் தேவைகளுக்கும்
நீங்கள் நாள் தவறாது
செல்ல வேண்டிய இடம்
WELCOME CENTRE

தரம்
தெரிவு
கனிவு
நம்பிக்கை

**209, High Street North, East Ham, London E6 1GH**

**Tel: 0181 552 2727, Fax: 0181 286 1974**

## வ. கீதாவுடன்

# ஒரு நேர்காணல்

வினவுபவர்: றஞ்சி (சுவிஸ்)

**சமூகத்தில் பெண்கள் சம்பந்தமான மதிப்பீடுகள் மாற்றத்திற்குட்படாத நிலையில் குடும்பக் கலைப்பை முன் வைப்பது பெண்களை இன்னமும் பாதுகாப்பற்ற நிலைக்குத் தள்ளி விடும் என்ற கருத்தில் உங்களுக்கு உடன்பாடு உண்டா?**

- றஞ்சி

வ.கீதா சென்னை கிறிஸ்துவ கல்லூரியில் எம்.ஏ.பட்டமும், அமெரிக்காவில் உள்ள அயோவா பல் கலைக்கழகத்தில் இலக்கிய விமர்சனம், குறியியல், போஸ்ட் ஸ்ட்ரக் சுரலிசம், போஸ்ட் மாடர்னிசம் போன்ற பாடங்களடங்கிய மற்றொரு எம்.ஏ.பட்டமும் பெற்றவர். ஆங்கில செவ்வியல் இலக்கியங்களில் ஆழ்ந்த புலமை பெற்றவர். பெண்ணியச் சிந்தனையாளரான வ.கீதா சென்னையிலுள்ள 'சிநேகிதி' என்ற பெண்கள் அமைப்பில் முக்கிய பணியாற்றுவதுடன் தமிழ் நாட்டிலும் இந்தியா முழுவதிலுமுள்ள பல்வேறு பெண்கள் அமைப்புக்களுடன் இணைந்து செயல்படுகிறார். எழுதுவதை விட பெண் விடுத லைக்காகச் செயலாற்றுவதையே முதன்மையானதாகக் கருதும் அவர் இந்தியாவின் பல பகுதிகளிலும், பிலிப்பைன்ஸ், அமெரிக்கா, கனடா ஆகியவற்றிலும் பல கருத்தரங்குகளில் பங்கேற்றுள்ளார். எஸ்.வி.ஆருடன் இணையாசிரியராக மூன்று நூல்களையும், மூன்று மொழியாக்கத் தொகுப்புக்களையும் ஒரு கட்டுரைத் தொகுப்பையும் வெளியிட்டும் ஆங்கில சஞ்சிகைகளில் கட்டுரைகள் எழுதியும் வந்துள்ளார். தமிழ நாட்டில் பார்ப்பனார் அல்லாதார் இயக்கம் பற்றி ஆங்கிலத்தில் வெளிவரவிருக்கும் நூலிற்கு முதன்மையான பங்களிப்பு வழங்கியுள்ளவர் இவர்தான். எஸ்.வி.ஆரைப்போலவே ஈழத்தமிழர்கள் பால் உண்மையான அக்கறையும் அனுதாபமும் கொண்டவர்.

1. தமிழ் நாட்டில் பெண்ணிய இயக்கங்களின் பலம், பலவீனம் மற்றும் அதன் செயற்பாட்டுத்திறன் பற்றிய உங்கள் அபிப்பிராயம் என்ன?
தமிழ்நாட்டில் எந்தளவு பெண்ணியம் சம்பந்தமான வேலைப்பாடுகள் அமைந்துள்ளன? இது எவ்வாறு சாதாரண பெண்களை சென்றடைகிறது?

தமிழ்நாட்டில் தற்சமயம் இயங்கிவரும் பெண்ணிய இயக்கங்களை -ஒரு வசதிக்காக- மூன்று வகையாகப் பிரிக்கலாம்:
கட்சி சார்ந்த அமைப்புகள், ஏனைய அரசியல் கட்சிகளின் மகளிர் அணிகள். இவற்றுள் நெடுங்காலமாகக் செயல்பட்டு வரும் அகில இந்திய ஜனநாயக மாதர் சங்கமும் (இது மார்க்சிய கம்யூனிஸ்ட் கட்சியுடன் தொடர்புடையது) அடங்கும்.
தன்னார்வக் குழுக்களின் முயற்சியின் காரணமாக ஏற்பட்டுள்ள மாதர் சங்கங்கள், பெண்கள் தலைமை தாங்கி நடத்தும் மகளிர் விடுதலை அமைப்புகள், மகளிரை மட்டுமே உறுப்பினராகக் கொண்டு இயங்கும் தன்னார்வ நிறுவனங்கள் ஆகியன இரண்டாவது வகை இயக்கத்தில் அடங்கும். இவற்றுள் பல அயல்நாட்டிலிருந்து பெறப்படும் உதவித்தொகை கொண்டு இயங்கி வருகின்றன. சில உள்நாட்டு நன்கொடைகள் திரட்டி செயல்பட்டு வருகின்றன.
மூன்றாம் வகை இயக்கத்தில் கட்சிசாராத, சுயாதீனமான வகையில் செயல்பட்டு வரும் பெண்கள் அமைப்புகள், ஒருங்கிணைப்பு முயற்சிகள் அடங்கும். இவற்றின் உறுப்பினர்கள் தாம் சம்பாதிக்கும் பணத்தின் ஒரு பகுதியை அமைப்புப் பணிகளுக்கு ஒதுக்குவர்.

பெண்ணிய இயக்கங்கள் கிராமப்புறங்களிலும், சில நகரங்களிலும், சிறு நகரங்களிலும் செயல்படு கின்றன. குறிப்பிட்ட பகுதிக்குரிய பிரச்சினைகள் -சுற்றுச்சூழல், சாதி, மதப் பிரச்சினைகள், கொத் தடிமை என்பன போன்ற பிரச்சினைகள்- முதல், பெண்கள் பெண்களாக இருப்பதால் எதிர் கொள்ளும் பிரத்தியேகப் பிரச்சினைகள் ஈறாக பெண்ணிய அமைப்புகள் பலவற்றில் தலையிட்டு பெண்விடுதலை, சமத்துவம் என்ற அடிப்படை யில் தீர்வுகளை உருவாக்க முயற்சி செய்து வருகின்றன.

கோட்பாட்டளவில் ஒருமித்த கருத்துக்கள் மகளிர் அமைப்புகளுக்கிடையே இல்லை என்றாலும், பெண்கள் சகித்து வாழும் அன்றாட வன்மு றைகள், பாலியல் பலாத்காரம், சாதி மதக் கல வரங்கள் உருவாக்கும் வன்முறைச் சூழல், சாதி... வர்க்கம் காரணமாக சில சமூக வகுப்புக்களைச் சேர்ந்த பெண்கள் எதிர்கொள்ளும் தனிச்சிறப்பான பிரச்சினைகள்/சுமைகள் ஆகியன குறித்த சில நிலைப்பாடுகள் ஏறக்குறைய அனைத்து அமை ப்புகளுக்கும் பொதுவானவையாக உள்ளன. அதா வது பெண் பெண்ணாக இருப்பதால் சந்திக்கும் வன்முறை, பெண் தலித்தாகவும், முஸ்லிமாகவும் உழைக்கும் வர்க்கப் பெண்ணாகவும் இருப்ப தாலும் சந்திக்கும் பொருளாதார, பண்பாட்டு, சமூக ஒடுக்குமுறைகள் ஆகியனவற்றை எதிர்கொண்டு புதிய விழுமியங்கள், புதிய உறவுகள் ஆகியவ ற்றை விளக்கும் ஒரு பெண்ணிய அரசியலின் தேவையை அனைத்து மகளிர் அமைப்புகளும் உணர்ந்து செயல்பட்டு வருகின்றன.

பெண்கள் சந்திக்கும் அடக்கு/ஒடுக்குமுறைகள் அனைத்துப் பெண்களுக்கும் பொதுவானவை தான் என்றாலும், பெண்களும் கூட சாதி, மத, வர்க்கப் பிரிவுகளைக் கடந்தவர்கள் அல்லர் என்ற கருத்து பெண்கள் அமைப்புகளின் விவாதங்களில் விவாதிக்கப்பட்டு வருகிறது. சாதிப் பிரச்சினை, வர்க்கப் பிரச்சினை ஆகியவற்றுள் தொடர்புடை யது தான் பெண்கள் பிரச்சினையும் என்ற புரிதல் இன்று பல இடங்களில் காணப்படுகிறது. பல் வேறு வகையான, காரசாரமான, ஆனால் ஆக்க பூர்வமான விவாதங்கள் பெண்கள் அமைப்புகளில்/ பெண்களுக்கிடையே நடைபெற்று வருவது எமது நாட்டு பெண்ணிய இயக்கத்தின் பலம்.

பலவீனம் : சில பொதுப் பிரச்சினைகளில் -வன் முறை, பஞ்சாயத்து, தேர்தலில் பெண்கள், பெண்க ளும் குடும்பக் கட்டுப்பாடும் (இதன் அரசியலை விமர்சித்தல்)- பெண்கள் அமைப்புக்கள் அவ் வப்போது இணைந்து செல்பட்டாலும், தொடர் ந்து ஒரு அணியாக இயங்க முடிவதில்லை. இரண்டாவதாக, பெண்ணியம் பற்றிய கோட்பாட்டு ரீதியான விவாதங்கள் பெண்கள் அமைப்புகளி டையே நடைபெறாமை. (குறிப்பிட்ட தலைப்பில்/ குறிப்பிட்ட பிரச்சினையை ஒட்டி கருத்து, விவர பரிமாற்றங்கள் நடைபெற்றாலும், there is no serious and susataied dialogue on politics, power, sexuality.

2. பெண்ணியம் சம்பந்தமான புதிய கோட்பாட்டுப் புரிதல்கள் அல்லது புதிய போக்குகள் தமிழகச் சூழலில் எந்தளவில் உள்ளன?

'பழைய' வரலாற்று ரீதியான புரிதல்கள்கூட -எடுத்துக்காட்டாக, பெரியார், சுயமரியாதை இயக் கத்தினர் முன்வைத்த பெண்ணியக் கருத்துக் கள்- நமது கூட்டு நினைவில் தெளிவாக இடம் பெறாத நிலையில் புதிய புரிதல்களைப் பற்றி என்ன சொல்வது? சில தனிப்பட்ட நபர்கள், அமைப்புக்கள் முதலியன பாலியல், குடும்பம், ஆண்-பெண் உறவு, பெண்-பெண் உறவு/ தோழமை குறித்து பேசியும் விவாதித்தும் வருகின்றனர். இருந்தாலும் இயக்கங்களின் செயல்பாட்டினை/செயல்பாடுகளை பாதிக்கும் அளவுக்கு இவ் விவாதங்கள் அமையவில்லை.

பெண்கள் இயக்கங்களின் அக்கறைகள், செயல் பாடுகள் ஆகியவற்றைப் பற்றி அறியமாட்டாமல் சிலர் -குறிப்பாக ஆண் அறிவாளிகள்- 'புதிய' பெண்ணியக் கருத்துக்களை விவாதித்தும் அவற்றைப் பற்றி எழுதியும் வருகின்றனர். ஒரு பெண்ணிய அமைப்பின் உறுப்பினர் என்ற வகையில் இத்தகைய விவாதங்களின் அரசியல் பொருத்தப்பாட்டை என்னால் சரிவர உணரமுடி யவில்லை. செயல்பாடும் சொல்லும் பின்னிப்பி ணைந்த நிலையில் ஒன்றை மற்றொன்று வடிவமைக்கும் பெண்ணிய அரசியல் சூழலில், "சொல் அதுவே(வும்(?)) சிறந்த செயல்" என்ற கருத்து வினோதமானதாக எனக்குப் படுகிறது.

3. உங்களுக்கும், தலித் பெண்ணிய அமைப்புகளுக்கும் இடையில் கூட்டு வேலைமுறைகள் ஏதாவது உண்டா?

நான் சார்ந்து பணிபுரியும் 'சிநேகிதி பெண்கள் அமைப்பு' குடும்ப வன்முறைக்குப் பலியாகும்/ சகித்து வாழும் பெண்களுக்கான ஆதரவு மைய மாக இயங்கி வருகிறது. பல்வேறு சமூகப் பிரிவு களைச் சேர்ந்த பெண்களின் -தலித் பெண்களின், வன்னியர் இனப் பெண்களின், ஆசாரி வகுப்பைச் சேர்ந்தவர்களின், பார்ப்பனப் பெண்களின், கிறிஸ் துவ, முஸ்லிம் பெண்களின், குடிசைவாழ் பெண் களின், நடுத்தர வகுப்புப் பெண்களின், 'பூர்சுவா' மேட்டுக்குடிப் பெண்களின்- வாழ்க்கை அவ லங்கள், அன்றாட தொல்லைகள் குறித்து நேர டியாக அறிய வாய்ப்புப் பெற்ற எங்களுக்கு சாதி, மதம், வர்க்கம் ஆகியன எல்லாப் பெண்களையும் ஒடுக்கும் விதத்தைக் காணமுடிகிறது. உயர் சாதிப் பெண்கள், நடுத்தர வர்க்கத்துப் பெண்க ளுக்கு இது உடனடியாகப் பிடிபடுவதில்லை. தலித் இனப் பெண்களுக்கும், உழைக்கும் பெண் களுக்கும் இது ஒரு சாதாரண உண்மை. பெண்கள் என்ற அடிப்படையில் நாங்கள் ஒரு தோழமையை, கூட்டுறவை உருவாக்கி செயல் பட்டு வருகிறோம்.

சாதியைக் கடந்து வந்துவிட்டோம் என்று நான் கூறவரவில்லை. நான் எதிர்கொள்ளும் ஆணா திக்கமும் தலித் பெண் ஒருவர் எதிர்கொள்ளும் வன்முறையும் ஒன்றாக இருக்க முடியாது. நான் அப் பெண்ணின் வேதனையை முழுமையாக உணரக்கூடியவளா என்பதுகூட எனக்குத் தெரி யாது. எனக்கு வாய்த்துள்ள சலுகைகள், நான் சுவீகரித்துள்ள செல்வாக்கு (படிப்பு, வேலை) இவை என்னைப் பொறுத்தவரை merely accidental தான். எந்தவகையிலும் நான் என்னளவில் அவற்றுக்கு உரியவள் அல்ல. ஆனால் ஒரு பெண் என்ற வகையில், பிற பெண்களையொத்த உடலமைப்பை உடையவள் என்ற வகையில், என்னால் பிற பெண்களுடன் பாசம், நேசம், காதல், தோழமை கொண்டாட முடிகிறது. அவ்வாறு கொண்டாடுவதில் அடங்கியுள்ள ஆனந்தத்தை, நிம்மதியை சொற்களால் விவரிக்க முடியாது. சாதி, வர்க்க வேறுபாடுகள் கொண்ட சமுதா யத்தில் ஒரு சிறிய பெண்ணிய தோழமை உலகை உருவாக்குவதில் - a women's space- நானும் எனது தோழிகளும் முனைந்துள்ளோம்.

4. குடும்பம் என்பது ஆணாதிக்கம் செயற்படும் ஒரு நிறுவனம் என்ற வகையில் குடும்ப அமைப்பு முறையை எப்படி எதிர்கொள்வது என்பதைக் கூறமு டியுமா?

குடும்ப அமைப்பின் அடித்தளம் வன்முறை. ஆண்-பெண் உறவின், குறிப்பாக கணவன்-மனைவி உறவின், பாலியல் உறவின் தன்மை இவ் வன்முறையால் வடிவமைக்கப்பட்டுள்ளது. ஆணாதிக்க குடும்ப அமைப்புக்குரிய பாலியல் தத்துவம் வன்முறையை தனது ஒவ்வொரு கோட்பாட்டிலும், செயலிலும், ஏன் மொழியிலும் கூட கொண்டுள்ளது. இத்தகைய வன்மு றையை அடித்தளமாகக் கொண்ட சமூக, பொரு ளாதார மறுஉற்பத்தியை சாத்தியப்படுத்தும், மிக அவசியமான (ஆனால் இழிச்செயலாகக் கரு தப்படும்), குடும்ப உழைப்பை மேற்கொள்ளும் குடும்ப உழைப்பாளியாகவும் பாவிக்கிறது. இதை -குடும்பத்தை மாற்றி அமைப்பதும், எதிர்கொள் வதும் -requires nothing none or less than a war between the sexes. The family is the ultimate site of the class struggle and in the final analysis, every man has to fight this war with himself, with his masculinity, his patriarchal conscience- பெண்கள் தமது தோழமையின். அடிப்படையில், புதிய பாலி யல் உறவுகளை (திருமணம் என்ற சட்டகத் துக்குள் புக விரும்பாத உறவுகளை) உருவாக் கிக் கொள்வதன் மூலம் இருக்கக் கூடிய குடும்ப அமைப்பை ஜனநாயகப்படுத்துவதன் மூலம் ஆணாதிக்கக் குடும்ப அமைப்பை எதிர்கொண்டு வருகின்றனர்.

5. சமூகத்தில் பெண்கள் சம்பந்தமான மதிப்பீடுகள் மாற்றத்திற்குட்படாத நிலையில் குடும்பக் கலைப்பை முன்வைப்பது பெண்களை இன்னமும் பாதுகாப்பற்ற நிலைக்குத் தள்ளிவிடும் என்ற கருத்தில் உங்களுக்கு உடன்பாடு உண்டா?

குடும்பம் பெண்ணை வதைக்கும் களம். ஆனால் வரலாற்றின் வினோத முரண் என்னவென்றால், இக் களம்தான் இன்றைய சூழலில் அவளுக் குள்ள புகலிடம். ஆனால் இப்போதுள்ள குடும்ப அமைப்பை அப்படியே பாதுகாக்க இது ஒரு வாதமாக பயன்படுத்தக் கூடாது. பெண்கள் அமைப்புக்கள் பெண்ணுக்கு ஆதரவும், தஞ்சமும் தரக்கூடிய மாற்றுக் களங்களாக அமையலாம்.

6. கருச்சிதைப்பை ஒரு சிசுக்கொலையாக உருவகிப் பது மதரீதியான மரபுவழிப்பட்ட சிந்தனையின் ஒரு தாக்கம் எனக் கொள்வதில் உங்களுக்கு முரண்பாடு உண்டா?

கிறிஸ்துவ, இஸ்லாமிய மதச் சிந்தனையின் தாக்கம் பதிந்த சமுதாயங்களில் கருச்சிதைவு இவ்வாறு விவரிக்கப்பட்டு ஒரு மாபெரும் விவாதத்துக்கு வழிவகுத்துள்ளது. இந்தியா வைப் பொறுத்த வரையில் இங்கு முற்றிலும் வேறானதொரு politics of reproduct வழைவு நில வுகிறது. கருச்சிதைவானது குடும்பக் கட்டுப்பாடு என்ற பெயரில் ஏழைப் பெண்களின் மீது திணிக் கப்படும் ஒன்றாக, பெண்கருவை அழிக்கும் முறையாக, ஆண்பிள்ளை ஆசையை நிவர்த்தி செய்ய (மறைமுகமாக) உதவும் வழியாகக் காணப்படுகிறது. இங்கு 'choice' politics என்ப தற்கு என்ன பொருள் இருக்க முடியும் - மூன்றில் ஒரு பெண்ணிற்குக் கூட தனது பாலி யல் வாழ்வின் தன்மையை, போக்கை நிர்ணயிக்க இயலாத/முடியாத போது....?

7. அ) ஆண்களின் பாலாதிக்கத்திற்கு எதிராக ஓரினச் சேர்க்கையை முன்மொழிவது பற்றி என்ன நினைக் கிறீர்கள்?

ஆ) ஓரினச் சேர்க்கை என்பது ஆண்களைப் பொறுத்த வரை குதவழியான உடலுறவு முறையை பிரதானமாய் உள்ளடக்கிய ஒன்று. எனவே ஓரினச் சேர்க்கை மூலம் ஒருவன் தன்னை ஒரே நேரத்தில் ஆணாகவும், பெண் ணாகவும் உணர முடியும் என்று சொல்லப்படுகிறது. பெண்களைப் பொறுத்தவரை இந்த உணர்வை நிறைவு செய்யமுடியுமா? முடியாது எனின், ஓரினச் சேர்க்கையை ஆண்கள் முன்மொழிவது என்பது கூட ஒரு ஆணாதிக்க வகைப்பட்ட சிந்தனைதான் என்று கொள்வதில் தவறு உண்டா?

ஓரினச் சேர்க்கை என்று மொழியாக்கம் செய்யப் பட்டு வரும் 'Homo sexuality' என்பது எல்லா நாடுகளிலும், சமுதாயங்களிலும், ஒரே படித்தா னதாக இருப்பதில்லை. இந்தியாவில், இந்தியாவின் பல்வேறு சமூக சூழல்களில் ஆண்களுக்கி டையே நெருங்கிய பிணைப்பும், நட்பும், பாலியல் உறவும் காணப்படுவதும், அவ்வாறு பெண்க ளுக்கிடையேயும் நெருங்கிய உறவும், தோழ மையும் காணப்படுவதும் அதிசயமில்லை. We are a segregated society and our most intense, intimate relationships are usually learnt under one of our own sex.

ஓரினச் சேர்க்கை என்பது ஆணை ஆணாகவும் பெண்ணாகவும் ஒரேசமயத்தில் அடையாளங் கொள்ள/ உணர முடிகிறது என்ற கருத்து எனக்கு வியப்பூட்டுகிறது. பல ஆண் ஓரினச் சேர்க்கையாளர்கள் அப்பட்டமான பெண் வெறுப் பாளராகவும் (Misogynists) இருக்கின்றனரே!

ஓரினச் சேர்க்கையோ, வேறு எந்தவகைச் சேர்க் கையோ ஒரு நபர் மேற்கொள்ளும் தேர்வுதா னேயன்றி ஒரு பாலியல் நியதியல்ல. எவ்வகை உறவாயினும் அது (ஒருவரது) ஆதிக்கத்தை நிலைநாட்டக் கூடிய உறவாக உருமாற்றப்ப டலாம். சேர்க்கையின் வடிவத்தைக் கொண்டு பாலியலின் அரசியலை, அதன் 'முற்போக்கு',

## மாற்றுக் கலாச்சாரம் :

# புலம் பெயர் சூழலில் சில அவதானங்கள்

யமுனா ராஜேந்திரன்

இருவேறு உலகப் பண்பாட்டு நெருக்கடியினுள்ளும் சாதக பாதகங்களுக்குள்ளும் நாம் புலம் பெயர் நாடுகளில் வாழ்கிறோம்.

நமது வாழ்வை அர்த்தமுள்ளதாக்கிக் கொள்வது எவ்வாறு? நமது கலாச்சாரம், நமது அடையாளம் போன்றவற்றை அடுத்த நூற்றாண்டில் எவ்வாறானதாக நாம் உருவாக்கிக் கொள்கிறோம்?

நாம் இங்கு பல்வேறு சமூக உறவுகளில் ஈடுபடுகிறோம். பல்வேறு கலாச்சார செயல்பாடுகளை மேற்கொள்கிறோம். கலை நிகழ்ச்சிகள் நடத்துகிறோம். சஞ்சிகைகள் வெளியிடுகிறோம். புத்தக வெளியீடுகள், நாட கங்கள், குறும்படங்கள் என ஆக்கச் செய லில் ஈடுபடுகிறோம். பள்ளிக்கூடங்கள், நடன, இசைப்பள்ளிகள் நடத்துகிறோம்.

இவையெல்லாம் அடுத்த நூற்றாண்டு மனிதன் எதிர்கொள்ளப்போகும் பிரச்சனைகள் குறித்து கவனம் கொண்டிருக்கின்றதா?

நாம் கொண்டு வந்த அமைப்புக்கள், உறவுகள், ஒழுக்கங்கள், வழிபாடுகள் மாற்ற மடைகின்றன. இங்கு வாழும் மேற்கத்திய மனிதனும் இதனால் பாதிக்கப்படுகிறான். எத்தனையோ ஆக்கபூர்வமான, நாம் சுவீகரித்துக் கொள்ளவேண்டிய விசயங்கள் இங்கிருக்கின்றன. இதைப் பற்றியெல்லாம் நாம் அக்கறை கொள்கிறோமா?

தனிநபர் சுதந்திரம் பற்றியும், தனி மனிதனின் உளவியல் உருவாக்கம் பற்றியும் என்றுமே அக்கறை கொண்டிருக்காத சமூ கம் நம்முடையது. தனிநபர் சுதந்திரம் குறித்து மிகுந்த அக்கறை கொண்ட சமூ கம் நாம் இங்கு வாழும் சமூகம்.

அதிகாரத்தை அறிவென்று நம்பும் கூட் டுச்சிந்தனை நமது மனக்கட்டமைப்பின் அடிப்படை. பன்முகப் பார்வைகள், நோக் குகள் வாழ்க்கைப் பார்வைகளை அங்கீக ரிக்கும் சமூகம் நாம் வாழும் இச்சமூகம்.

இந்த முரண்பாடுகளில் உள்ள ஆக்கபூர்வ அல்லது எதிர்மறை அம்சங்களை நாம் எவ்வாறு எதிர் கொள்ளப் போகிறோம்?

ஒருவகையில் நாம் இச்சமூகத்தில் அந் நியமான மனநிலையில் காலம் கழிப்பவர்கள். அரசியல், நிறுவனங்கள், தெருக்கள், இயற்கை, சீதோஷ்ணம் அனைத்துமே இங்கு நமக்கு அன்னியமானவைதான். இந்த அந்நியமாகின உணர்வை நாம் வாழ் நிலையில் கண்டிட வாழ்க்கைச் செயல்களில் எவ்வாறு சேர்ந்து கடந்து போக முடியும்?

இதற்கான மாற்று சாதன வழிகளையே நம் பண்பாடென்று போற்றித் திரிகிற போக் கையே நாம் காண்கிறோம். மதம் சார்ந்த சடங்குகள், சாமத்தியச் சீர்கள், ஆடம் பரங்கள், சீதனம், கோயில் திருவிழாக்கள் போன்றவற்றை நம் பணபாடென்று கருதுகிற போக்கே ஆதிக்கம் கொண்டிருக் கிறது.

இசை நடன நிகழ்வுகளிலும் பள்ளிப் பாடத்திட்டங்களிலும் இந்துமத வைதீக மரபுகளையே நாம் உள்ளீடாகக் கொண்டிருக்கிறோம். மதச் சார்பற்ற மனித விடுதலை நோக்கிய கூறுகள் நமது கலை வெளியீடுகளில் இடம் பெறுவதில்லை.

கல்வித்துறை சார்ந்த அறிவையும் எமது நாட்டு நோக்கிலான எந்த விமர்சனமும் இன்றி நாம் கற்றுக் கொள்கிறோம். விஞ்ஞானம், கணக்கியல், புள்ளியியல், தகவல் தொழில்நுட்பம் கணணிப்படிப்பு போன்றவற்றின் அடிப்படையில் செயல்படும் சமூகப்பாதிப்புக்கள் அரசியல் நோக்கு போன் றவை பற்றின விமர்சனப் பார்வையுடன் இவைகளை நாம் பயில்வதில்லை.

காலனிய அடிமைத்தனம் உருவாக்கிய குமாஸ்தாக்களைப் போன்றவர்களே இன்றைய பொறியியலாளர்களும் மற்றவர்களும் கணக்காளர்களும். எமது தேச உருவாக்கத்தில் இவர்களின் அறிவின் இடம் குறித்து இவர்களில் எவருமே அக்கறைப்படுவதில்லை. இவர்களது அறிதலுக்கும் எமது சமூகத்தின் தேவைகளுக்கும் எந்தவிதமான உறவும் இருப்பதில்லை.

இத்தகைய சூழலில் நாம் செலுத்த வேண்டிய பார்வை செயல்பட வேண்டிய களங்கள் எவையெவை?

1) கலை, கலாச்சாரம், நாடகம், சினிமா போன்றவற்றில் உலகெங்கும் நிகழும் மாற்றங்களை நாம் தமிழுக்குள் கொண்டு வர வேண்டும். இதை ஒரு இயக்கமாக முன்னெடுக்க வேண்டும்.

நாடகக்குழுக்கள், திரைப்படச் சாகரங்கள் , கவிதைப் பட்டறைகள், மாற்றுக் கல்வித்திட்டம் என விவாதம் நடைபெற வேண்டும்.

2) நடனம், இசை, குழந்தைப் பள்ளிப் பாடங்கள் போன்றவற்றுள் மதச்சார்பற்ற மானுட விடுதலை கருக்களை விதைக்கும் படைப்புக்கள் அறிமுகப்படுத்தப் பட வேண்டும்.

3) தகவல் தொழில்நுட்பம், நவீன சிந்தனைகளான பின்நவீனத்துவம், அமைப்பியல், பெண்ணியம் போன்றவற்றின் அரசியல் விளக்கப்பட்டு விவாதிக்கப்பட வேண்டும்.

4) தேசியக் கலாச்சார உருவாக்கத்தில் மதம், மொழி, அரசியல் கட்டமைப்பு, மக்கள் பங்களிப்பு, நிறுவன அறம் போன்றன பற்றிய விவாதங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

5) நவீன ஓவியம், அருவ இசை, கூட்டிசை போன்றவை பற்றிய உணர்வினைப் பெறுவதோடு ஒரு புதிய உலகக் கலாச்சாரத்திற்கான கூறுகளை பல்வேறு கலாச்சாரங்களின் ஆக்கக்கூறுகளில் இருந்து கண்டறிய வேண்டும்.

6) தகவல் தொழில்நுட்ப சாதனங்களான பத்திரிகை, வானொலி போன்றவற்றின் அடிப்படை நெறிகள் விவாதிக்கப்பட வேண்டும்.

7) தகவல் தொழில்நுட்ப யுகத்தின் சாதகங்களைப் பயன்படுத்தும் அதேவேளை புதிய சமூக மதிப்பீடுகளையும் இச்சாதனங்கள் ஏற்கச்செய்ய வேண்டும்.

புலம் பெயர் நாடுகளில் நாம் எதிர் கொள்ளும் அனுபவங்கள் தரும் அறிவு அளப்பரியவை. இவற்றை நாம் அறிமுகப்படுத்திக் கொள்ள வேண்டும். ஸ்வீகரித்துக் கொள்ள வேண்டும். வாழ்ந்து பார்க்க வேண்டும். கற்றுக் கொண்டு நம் சமூக வாழ்வுக்குள் பிரயோகிக்க வேண்டும். நாடோடியின் வாழ்வும், யாத்திரீகர்களின் தேடலும், கப்பல் பயணியின் சாகசங்களும் தான் உலகின் தூரங்களை குறுகிப் போகச் செய்தன. அறிவுப் பரப்பை விரித்தன.

நமது வாழ்வு ஒருவகையில் தேடிச் செல்லும் நாடோடிகளின் வாழ்வு தான். புதிய உலக நெறிகளை உருவாக்கும் நாடோடிகளின் வாழ்வு தேடிச் செல்வோம். மாற்றுக் கலாச்சாரத்திற்கான வேர்களை, பாதைகளை கண்டறிவோம்.

இலங்கையில் இருந்தும் இந்தியாவிலிருந்தும் இறக்குமதி செய்யப்பட்ட சகல விதமான
மளிகைப் பொருட்களையும்,
ஓடியோ கசட்டுகள், சீடிக்கள், தமிழ் சஞ்சிகைகள், பத்திரிகைகள்
ஆகியவற்றையும் எம்மிடம்
மலிவு விலையில்
பெற்றுக் கொள்ளலாம்.

SIVRAJ ENTERPRISES

தமிழ் திரைப்பட
வீடியோ கசற்றுகளின்
தரமான பிரதிகளை நியாயமான விலையில்
வாடகைக்குப் பெற்றுக் கொள்ளலாம்.

114 TOOTING HIGH STREET, LONDON SW17 ORR
Tel: 0181 682 1677/ 0850 846 238
Fax: 0181 767 0167

# சிவகாமியின் பழையன கழிதலும்...

–சில கருத்துக்கள்–

## (இலக்கியம் என்றால் என்ன? எது நல்ல இலக்கியம்?)

நாவல் இலக்கியத்தில் பொதுவாக இரண்டு விதமான போக்குகள் காணப் படுகின்றன. ஒன்று வியாபார நோக்கம் கொண்ட பதிப்பகங்கள் எழுத்தாளர்க ளால் வெளியிடப்படும் 'ஜனரஞ்சக நாவல்கள்' இரண்டாவது வகை இந்த நோக் கத்திற்கு அப்பாற்பட்டு வெளியாகும் படைப் புக்கள். முன்னையதின் எழுத்தாளர்கள் 'பொப்புலர்' ஆனவர்கள். பின்னையதின் எழுத்தாளர்கள் சிறு சஞ்சிகைகளும் அதன் வாசகர்களும் அறிந்த எழுத்தாளர்கள். முன்னைய நாவல் உற்பத்தி தனியான ஒரு நோக்குகைக்குரியது என்பதால் அதைப்பற்றி விட்டு மற்றையதைப் பற்றி பேசலாம்.

இதிலும் பலவகையான நாவல்கள் வெளிவந்திருக்கின்றன. அவை ஒவ்வொன் றும் ஏதோவொரு இலக்கிய அவைக்குள் அடக்கப்பட்டும் விடுகின்றன. முற்போக்கு இலக்கியம், யதார்த்த இலக்கியம், ஆன்மீக இலக்கியம்... இப்படி பல. இத்தகைய பல பிரிவுகளுக்கு நாவல் இலக்கியம் தள்ளப் பட்ட போதும் அந்த அவைக்குள் வந்த எல்லாமே இலக்கிய அளவில் வெற்றி பெற் றன என்றோ அல்லது எல்லாமே தோற்றன என்றோ கருதமுடியாது. இவற்றுள் சமூக, அரசியல் பிரச்சனையை வெளிப்படையாக எடுத்தியம்பிய நாவல்கள் பல தோல்வியுற்று இருக்கின்றன. மிக அரிதான சிலவே சிறந்த இலக்கியங்களாக திகழ்கின்றன. அந்த வகையில் தமிழ் இலக்கியச் சூழலில் முற் போக்கு எழுத்தாளர் முகாமில் இருந்து வந்த படைப்புக்கள் பெரும்பாலும் தோல்வி யுற்றிருப்பதையும் உயிரற்றிருப்பதையும் காண்கின்றோம். இன்றும் கூட முற்போக்கு எழுத்தாளர் என்று தம்மை பிரகடனப் படுத்திக் கொண்ட பலர் அதற்காகவே தொடர்ந்து விடாப்பிடியாக இலக்கியம் படைத்துக் கொண்டிருக்கிறார்கள். இவர்க ளின் பிரதான குறைபாடாக திகழ்வது இவர் கள் இலக்கியத்தை இன்றும் ஒரு கருவி யாக கருதிச் செயல்படுவதேயாகும்.

இன்று இலக்கியம் பற்றிய அறிதலில் எவ்வளவோ முன்னேற்றங்கள், விமர்சனத் துறை இன்னோர் இலக்கிய அறிவுத்துறை யாக வளர்ந்திருக்கின்றது. வளர்ந்து வருகின்றது. அவை இலக்கியத்தை வெறும் கருவியாக கருதும் மிக எளிமைப் படுத்திய போக்கையும் மறுபுறம் இலக்கி யங்களை, படைப்புக்களை, சிருஷ்டி என் றும், உன்னதமானது என்றும், கொடை என்றும் கூறும் புனித கோட்பாட்டையும் உடைத்தெறிந்துள்ளன.

"இலக்கியப் படைப்பு என்பது தூயதான ஒரு கண்டுபிடிப்பல்ல; இல்லாததில் இருந்து உருவானதல்ல; வெளியில் திடீ ரென எழும் தோற்றமல்ல; ஒரு தேவையில் இருந்து எழுவது. அதாவது தேவை உருவாக்கித் தரும் அடையாளமே (குறிப்பீடே) இலக்கியம்" என்று பியர் மார்ஷெரி குறிப்பிடுவது கவனிக்கத்தக்கது.

பியர் மார்ஷெரியின் கூற்று எளிமை ப்படுத்தப்பட்டது போல் தோன்றினாலும் அதன் ஆழமான ஆராய்ச்சியில் இதன் உண்மை புலப்படும். அந்த வகையில் எழுத்திற்கான தேவை உருவாக்கித்தரும் சூழலில் வெளிவரும் படைப்புக்கள் உயி ருடன் இருப்பதை நாம் அவதானிக்கலாம். ஈழத்துக் கவிதைகள் போராட்டச்சூழலில் உயிர்ப்புடன் புதிய பரிமாணத்தை எட்டியதை சிறந்த உதாரணமாக குறிப்பிடலாம். இதே போல் தமிழகத்தில் பல நல்ல நாவல்கள் வந்திருக்கின்றன. ஆயினும் அடிமட்ட மக் களின் பிரச்சனைகளை அவர்களது யதார்த்த வாழ்வோடு வெளிப்படும் நாவல்கள் மிக அரிதென்றே குறிப்பிடலாம். இலங்கையில் தாழ்த்தப்பட்ட மக்களின் பிரச்சனைகளை நாவலில் கொண்டு வந்த டானியல் போன்று தமிழகத்தில் ஒருவர் இல்லை. இன்று அந்த மக்களுக்கான தனியான இலக்கியம் (தலித் இலக்கியம்) என்றெல்லாம் பேசப்படும் சூழலில் அவர்களின் வாழ்வை உயிர்த் துடிப்புடன் பதிவு செய்துள்ளது 'பழை யன கழிதலும்' என்ற சிவகாமியின் நாவல்.

நாவலுக்கு தமிழகத்தில் பெண் எழுத்தா ளர்களில் ஒருவரான 'ராஜம் கிருஷ்ணன்' முன்னுரை எழுதியுள்ளார். மார்ஸியக் கொள் கைகளில் ஈடுபாடு உடையவரும் பெண் விடுதலையில் அக்கறையுள்ள ராஜம் கிருஷ்ணன் இன்னொரு பெண் எழுத்தா ளர்களாக அறிமுகமாகும் சிவகாமியின் நாவலுக்கு முன்னுரை எழுதியது பொருத்த மான ஒன்றே. ராஜம் கிருஷ்ணன் பற்றிய மதிப்பீட்டை ஒருபுறம் வைத்து கூட்டு பெண்ணிய நோக்கில் நாம் இதை வரவேற் கலாம். அதே பொழுதில் இதை வேறு ஒரு கோணத்தில் இப்படியும் சொல்லலாம். பார்ப்பண சமூகத்தைச் சேர்ந்த ஒருவர் 'தலித்' சமூகத்தைச் சேர்ந்த ஒருவரின் நாவல் இலக்கியத்திற்கு முன்னுரை எழுதி யதாக. இந்த நோக்கில் பொருத்தமற்ற ஒருவர் முன்னுரை எழுதியுள்ளதாகவும் நாம் குறிப்பிடலாம். முன்னுரையில் இப்படிக் குறிப்பிடுகிறார். "இந்த நவீனம் தமிழ் நாட் டின் ஒரு கிராமத்தின் தாழ்த்தப்பட்ட மக்கள் வசிக்கும் பகுதியிலும் அடுத்த சற்றே உயர்ந்த பிற்பட்ட சாதியினருக்கும் இடையே நிலவும் வேற்றுமை – எதிர்ப்புணர்வுகள் சம்பந்தம் இல்லாத (அடிக்கோடு என்னு டையது) ஒரு பொது நிகழ்வினால் முக் கிய காரணியாகத் திரிக்கப்பட்டு இனக் கலவ ரங்களாக உருவாக்கப்படும் விளைவுகளை மிக இயல்பான முறையில் விரிக்கின்றது.

இங்கு வேற்றுமை எதிர்ப்புணர்வுக ளுக்கு சம்பந்தம் இருப்பதாலே தான் அந்தப் பொது நிகழ்வு நாவலின் முக்கிய யதார்த்த மாகிறது. 'தங்கம்' உடையாரால் அவரது இச்சைகளுக்கு பலியாகி பின்னர் அவரது சாதியினராலேயே நடுத்தெருவில் நையப் புடைக்கப்படுவது எதனால்? அவள் பெண் என்பதனால் மட்டும் அல்ல. அதை விட தாழ்த்தப்பட்ட சாதியைச் சேர்ந்தவர் என்பதனால்தான். எனவே இங்கு வேற் றுமை–எதிர்ப்புணர்வுக்கு சம்பந்தமில்லாதது என்பது அர்த்தமற்றுப் போகிறது. இதையே கதையில் "நானும் இந்தம்மா சாதி தான் பொண்ணு தான் நாளைக்கு நம்மையும் நாலு பேர் அடித்துத் தூக்கில் போட மாட்டார்கள் என்பது என்ன நிச்சயம்" என்று கௌரி சிந்திப்பது தெரிகிறது.

பிறிதொரு சந்தர்ப்பத்தில் நிகழ்வைத் திரித்து எழுதும்படி காத்தமுத்து மகளிடம் வேண்ட மகள் அப்பாவின் 'உண்மைக்கு புறம்பான நிகழ்வு கண்டு வேதனை உறுகிறாள். இங்கு காத்தமுத்து சுயலாபத் திற்காக உண்மையைத் திரிக்கும் ஒரு பொய்யர் என்ற கருத்து வாசகர் மனதில் உருவாக்கப்படுகிறது. ஆனால் ஒடுக்கப் பட்டவர்களுக்கும் ஒடுக்குபவர்களுக்கும் யுத்தம் என்று வந்தபின் நீதி, உண்மை, நேர்மை எல்லாம் சார்பளவிலானது என்பதே உண்மை. கீழ் சாதி அனாதைப்பெண்ணை மேல்சாதி உடையார் ஆட்கள் நடுத் தெருவில் நையப்புடைத்து பழியை அவ ளில் மட்டும் போடும் போது உண்மைக்கு புறம்பானது என தூய்மை வாதம் பேசுவது மேலாதிக்க கருத்தியலுக்கு பலியாகிப் போன ஒரு நிலமையே.

அடுத்து நாவலில் வரும் மேல்சாதிக் காதலியும் தாழ்த்தப்பட்ட சமூகத் தைச் சேர்ந்த காதலனும் சாதி வித்தியாசம் பாராமல் பரஸ்பரம் காதலிக்கிறார்கள். ஒரு தடவை "உம் சாதிப்புத்திய காட்டிப் புட்டய" என்று அவள் கேட்டதற்கு வெகுண்டெழுந்து அவளின் உறவையே வெறுக்கும் இளங்கோவன் பின்பு அவளே தேடி வந்த தும் சமரசம் ஆகிறான். சாதியைக் கடந்து கைப்பிடிக்கத் துணிந்த லலிதாவிடம் எப்படி அப்படி பேச முடிந்தது. இங்கு தான் கருத் தியல் எவ்வாறு 'நினைவிலி மனத்தில் கட்டமைக்கப்படுகிறது என்றும் கவனப் பெறுகிறது. இது பிரக்ஞையற்றும் வெளிப் படுகிறது. பிரக்ஞை பூர்வமாகவும் வெளிப் டுகிறது. லலிதாவே அவனைத் தேடிவரும் போது அவன் அவளின் நிலையை புரிந்து கொள்கிறான். இங்கு போராட்டமும் ஐக்கி யமும் ஐக்கியமும் போராட்டமும் தான் ஆதரவாளர்களை இவ்வாறு தான் அனுகமுடியும். வேண்டும் என்பதற்கு இது நல்ல யதார்த்தமான எடுத்துக்காட்டு. சுருக்கமாக நோக்கின் இலக்கியம் என்ப தன் உச்சமான படிமம் உயிராய் நிற்பதும், பெண்ணியக் கருத்துக்களும், தலித்துக்க ளின் சமூக விழிப்புணர்வும், கதையில் சங்கமிப்பதும் நாவலின் சிறப்பம்சம் எனலாம். பெண்ணாய் இருந்த போதும் சாதிய அடையாளமே முன்னுக்கு நிற்பதும், ஏனைய விடயங்கள் இரண்டாம் பட்சமாய் நிற்பதும் யதார்த்தம் என்ற போதும் பெண் ணிய நோக்கில் விமர்சிக்கக் கூடியவையாக இருப்பதும் (உ-ம் ராமலிங்க ரெட்டியாரின் மனைவியை பத்தினி என கிண்டல் பண் ணுவது) நாவலின் குறைபாடுகள் எனலாம். மேல்தட்டு சமூகத்திலே நடக்கும் 'ஒழுக் கக்கேடுகள்' அல்லது மீறல்கள் தோலு ரித்துக் காட்டப்படுவது அப்படியே நம்மூர் டானியலை நினைவுக்கு கொண்டு வரு கிறது. கீழ்தட்டு காத்தமுத்துவிடம் இருக் கும் பண்பு மனைவியருக்கும் 'பலானது' ஊற்றிக் கொடுத்து தானும் குடிப்பது. மேல் சாதிகளிடம் இல்லாத ஜனநாயகப் பண்பு இருப்பினும் டானியல் பஞ்சமர் சமூகத்தைச் சேர்ந்தவர் ஆதலால் அவரிடம் வெளிப்பட்ட ஒழுக்கத்துறை கேள்விக்குள்ளா கும் (மேல்சாதியின்) பார்வை இருந்தபோதும் அவரது கருத்துக்கள் பெண்ணிய நோக்கு விமர்சிக்கப்பட வேண்டியவை ஆகவும் சிலசமயம் கடுமையாக விமர்சிக்க வேண்டியவையாகவும் இருந்தன. இவற்றை டானியலினால் முற்றாக தவிர்க்க முடிந்திராது. ஏனெனில் அவர் ஓர் ஆண் எழுத்தாளர். ராஜம் கிருஷ்ணன் சொல்வது போல் "சமுதாய ஆதிக்கங்களும் பெண்ணிலிருந்தே தொடங்குகிறது". என்பதற்கேற்ப சிவகாமி போன்ற எழுத தாளர்கள் இன்னும் பல பரிமாணங்களில் வளர் வார்கள் என நம்பலாம்.

**-இலக்கியா**

---

# புலம் பெயர் நாடுகளில் தமிழ் சிறார்களும் தாய்மொழிக் கல்வியும்...

## ஓர் அறிமுகம்

**லோகதாஸ்**

கறுப்பு யூலை கொடிய நிகழ்வுக ளுக்கும் ஈழத்தமிழரின் புலம்பெயர் விற்கும் வயது ஒன்று தான். எமது சிறார்கள் சுமார் 10 வருடங்களுக்கு மேலான வாழ்வை புலம் பெயர்ந்த நாடுகளில் தரிசித்துக் கொண்டி ருக்கிறார்கள். இவர்களில் தாய் மண்ணில் பிறந்தவர்களும், இந்த அந்நிய மண்ணிலேயே பிறந்து தாய் மண் வாசனையை முகர்ந்து கொள்ளாதவர்களும் அடக்கம். இப்பத்து ஆண்டு காலத்தில் தாய் மொழிக் கல்வி பற்றியும், எமது கலை, கலாச்சாரத்தை எமது சிறார்களுக்கு தெரியவைப்பதற்கு மான சிறு சிறு முயற்சிகள் ஆங் காங்கே மேற்கொள்ளப்பட்டு வரு வது என்பது ஏதோ உண்மை தான். குறிப்பாக மேற்கு ஐரோப்பிய நாடுக ளிலும் (ஜேர்மன், பிரான்ஸ், நெதர்லாந்து, சுவிற்சலாந்து) ஸ்க ன்டிநேவியா நாடுகளிலும் அவுஸ்தி ரேலியாவிலும் இதற்கான முன்மு யற்சிகளை மேற்கொண்டிருப்பதும் கண்கூடு. ஆனால் இம்முயற்சிகள் எல்லாம் எந்தளவுக்கு ஆழமாகவும் சிறார்களின் சூழலுக்கேற்ற கல்வி முறைமைகளைக் கொண்டிருக் கின்றன என்பன பற்றியும், 30,40 ஆண்டுகளுக்கு முந்திய மரபுவழிக் கல்வி முறையில் இருந்து எவ்விதம் மாற்றம் பெற வேண்டும் என்பன போன்ற விடயங்களை ஆய்வு செய் வதே இக்கட்டுரையின் நோக்கமா கும். மேலும் இக்கட்டுரை சுவிஸில் இருந்து எழுதப்படுவதனால் பெரும் பாலான அம்சங்கள் சுவிஸையும் ஓரளவு மேற்கு ஐரோப்பிய நாடு களையும் மையப்படுத்தியிருப்பது இயல்பே!

ஒரு இனத்தின் சுய அடை யாளத்தை வெளிப்படுத்தும் முக் கிய அம்சங்களாக இருப்பவை அவ் வினத்தின் கலை, கலாச்சாரங்கள். அவ்வினத்தின் கலை, கலாச் சாரங்களையும் தொன்மைப் பண்புக ளையும் எழுத்துருவில் தாங்கி நிற் பவை இலக்கியங்கள். இவ்விலக்கி யங்களின் பிரதான ஊடகம் அவ்வி னத்திற்குரிய மொழி. இவ்வடிப்படை யில் ஒரு இனத்தின் சுயஅடையா ளத்தை வெளிப்படுத்தும் பிரதான ஊடகமாக அமைவதும் அவ்வினத் தின் மொழி என்பதில் மாறுபட்ட கருத்துக்களுக்கு இடமில்லை என்று கூறும் போது, ஈழத்து முஸ்லீம்களை எப்படி வகுப்பது என்ற வாதமும் எழலாம். அவர்க ளையும் 'தமிழ் பேசும் முஸ்லீம்கள்' என்று வகைப்படுத்தும் போது அவர்களின் சுய அடையாளத் திற்கான பிரதான ஊடகமாக அவர் களின் மொழியே முன்நிற்கிறது. (இவை பற்றிய ஆழமான ஆய்வை சமூகவியலாளரிடம் விட்டுவிடுவோம்)

மேற்கு நாட்டவர்கள் தமது சிறார்களின் விடயங்களில் செலுத்தும் அக்கறையுடன் ஒப்பிடும் போது, நாமும் எமது சமூகப்பண்பும் சிறார்கள் சார்பான விடயங்களைக் குறைத்து மதிப்பிடுவதும் அவர்க ளின் உளவியல் ரீதியான விடயங் களில் அக்கறை குறைந்தவர்க ளாகவும் இருக்கின்றோம் என்பதை சாதாரணமாகக் கண்டுகொள்ள முடியும். இந்த அக்கறைக் குறை வின் வெளிப்பாடு தான் எமது சிறார்கள் புலம் பெயர் நாடுகளில் கல்விகற்க ஆரம்பித்து 10 ஆண்டு கள் கடந்த நிலையிலும், அவர்க ளின் சுய அடையாளத்தை வெளிப் படுத்தும் பிரதான ஊடகமாக தாய் மொழிக் கல்வி சார்பாக மாறுபட்ட (பூகோள ரீதியிலும், சமூக ரீதியி லும்) சூழலுக்கேற்ப கல்வி முறை யிலும் சரி பாடத்திட்டத்திலும் சரி எவ்வித மாற்றத்தைக் கொண்டு வருவது பற்றிய எவ்வித ஆய்வுமற றவர்களாக தமிழ் சமூகம் காணப்ப டுகிறது. புலம் பெயர்ந்த நாடுகளி லும் தமிழ்மொழிக் கல்வி சார்பாக (அதுவும் மிக அண்மையில் தான்) வெளிவந்த கட்டுரைகள் இரண்டே இரண்டு தான்.

ஒன்று நியூகாம் தமிழர் நலன் புரிச் சங்கத்தின் 10வது ஆண்டு சிறப்பு மலரில் மாலை நித்தி யானந்தன் எழுதிய 'அவுஸ்திரே லியாவில் பாரதி பள்ளி' பற்றிய அனுபவம்.

அடுத்தது, 97 மார்ச் பாலம் இத ழில் ஆதவன் மல்லீஸ்வரி எழுதிய புலம் பெயர் நாடுகளில் தாய மொழி.....தமிழ்மொழி என்ற கட்டுரை.

இதில் மல்லீஸ்வரியின் கட்டுரை மாறுபட்ட சூழலுக்கும் தாம் வாழும் நாட்டின் மொழிக்கல்வியின் (உ-ம் சுவிஸ், ஜேர்மன், பிரான்ஸ், இத்தாலி) பாடவிதானங்களுக்கு ஏற்ப தமிழ் மொழியில் புதிய பாட த்திட்டம் அமைய வேண்டும் என்றும் புதிய பாடப்புத்தகம் உருவாக்கப்பட வேண்டும் என்றும் தாம் செல்லும் பாடசாலையில் ஆசிரியரின் அணுகு முறைக்கும் தமிழ் பாடசாலையில் ஆசிரியரின் அணுகு முறைக்கும் ஒற்றுமை பேணப்பட வேண்டும் என் றும் வலியுறுத்தியுள்ளமை குறித துக் கொள்ளப்பட வேண்டிய சத தான அம்சம் ஆகும். மாலை நித்தி யானந்தனின் கட்டுரை இவ்விட யத்தை மேலோட்டமாகவே உரசியுள்ளது.

இது தவிர நா.கண்ணன் பிள் ளைகளுக்கான இலக்கியம் பற்றி இதே நலன்புரிச்சங்க 10 ஆண்டு சிறப்பு மலரில் எழுதியுள்ளார்.

இது பிள்ளைகளின் இலக்கி யங்கள் எப்படி அமைய வேண்டும் என்பதை துல்லியப்படுத்துகிறது.

தவிர பாரதிபள்ளியின் 'பாப்பா பாரதி' ஒளிநாடாவும் நோர்வேயில் இருந்து 'சின்னப்பூக்கள்' ஒலிநாடா வும் வெளிவந்துள்ளன. (இதை கேட்கும் வாய்ப்பு எனக்குக் கிட்ட வில்லை)

இவை எதுவும் தமிழ்ச் சிறார் களின் தாய்மொழிக் கல்வி பற்றிய ஆழத்தைத் தொடவில்லை. இவ்வா ழத்தைக் குறிப்பிட்ட சிலரினால் பூர்த்தி செய்து விடலாம் என்றும் கூறுவதற்கில்லை. தமிழ்ச் சிறார்க ளின் தாய்மொழிக் கல்வியில் அக் கறை கொண்டவர்களினதும், கல்வி மான்களினதும் அனுபவங்களுடன் கூடிய விவாதத்தினூடாகவே இவ் விடயம் பூரணத்துவம் பெறும் என்ற நம்பிக்கையும், மாற்றுக் கருத்துக்க ளையும் விமர்சனங்களையும் எதிர் பார்த்து-

எழுத்தறிவிக்கும் முறை,
கற்பிக்கும் விடங்கள்,
பரீட்சைகள்,
போட்டிகள்,
கலாச்சார நிகழ்ச்சிகள்

ஆகிய தலைப்புக்களில் இக்கட் டுரையை அடுத்து வரும் இதழ்க ளில் தொடர்கிறேன்.

www.padippakam.com



# பொறுக்கியவை

## தாமக்கொச்சி

யப்பானில் 'Bandai' என்றொரு நிறுவனம். அதற்குப் பொழுது போகவில்லை. தயாரித்து தாமக்கொச்சி (tamgotchi)யை, எல்லா நாடுகளுக்கும் அனுப்பி வைத்தது. இப்போது எங்கு பார்த்தாலும் தாமக்கொச்சியைப்பற்றித்தான் ஒரே கதை. இலண்டன் கடைகளிலெல்லாம் மட்டை தொங்குகிறது 'இங்கே கிடைக்கும்' என்று. ஒன்றின் விலை 10 பவுண்கள்.

அதென்ன தாமக்கொச்சி....?

ஒரு இலத்திரனியவியல் குழந்தை. பசிக்கு அழும், உண்டபின் மலம் கழிக்கும், விளையாடக் கேட்கும், கவனிக்கவில்லையென்றால் செத்துவிடும். இத்தனையும் ஒரு சிறிய முட்டயளவில்.

விற்பனைக்குக் கடைக்கு வந்தவுடனேயே எல்லா தாமக்கொச்சிகளும் விற்றுத் தீர்ந்துவிடுகின்றன. வழக்கம்போல பல போலிகளும் விற்பனைக்கு வந்திருக்கின்றன. பலர் முன்பதிவு செய்துவிட்டுக் காத்துக்கொண்டிருக்கிறார்கள்.

'Internet'ல் தாமக்கொச்சிக்கு மயானம் உண்டாக்கியிருக் கிறார்கள்.

தாமக்கொச்சியைச் சிறப்பாக வளர்ப்பது எப்படி? என்று பல புத்தகங்கள் வெளிவரத் தொடங்கியிருக்கின்றன. லேனா தமிழ்வாணன் இன்னும் கை வைக்கவில்லை.

தாமக்கொச்சி காய்ச்சல் பலமாகப் பரவிக்கொண்டிருக்கை யில் எனக்குத் தேவையில்லாத சில கேள்விகள் வருகின்றன. உலகில் எத்தனையோ பேர் நாளாந்தம் பட்டினியில் சாகிறார்கள். அதில் பெரும்பாலானவர்கள் பச்சிளங் குழந்தைகள். யார் அக்கறைப்படுகிறார்கள்? ஆனால் தாமக்கொச்சி......? கொடுத்து வைத்தது. அங்கே இலத்திரன் குழந்தையை வளர்க்க இலட்சக்கணக் கானோர் நாயாக அலைகிறார்கள். Bandaiயின் அடுத்த தயாரிப்பு அனலைக்கொச்சி.

## சாரா

அந்தச் சிறு மியின் பெயர் சாரா (Sarah). பிலிப்பைன்ஸ் நாட்டைச் சேர்ந்தவள். வீட்டில் வறுமை, படிப்பில்லை, வேலை கிடைக்கவில்லை. பெற்றோர் இவளைப் பணிப் பெண்ணாக துபாய்க்கு அனுப்பி வைத்தார்கள். பெண் வறுமையால் வந்தவள், போதுந்தானே அரபுச் ஷேக்குக்கு, சிறுமியாவது மண்ணாவது. சாராவுடன் சேட்டைகளைத் தொடங்கினான். பணத்திமிர். இத்தொல்லை ஒருநாள் அத்துமீறியபோது சாரா என்ற அந்தக் குழந்தை பொங்கியெழுந்து அவனைக் கத்தியால் குத்திக் கொன்றுவிட்டாள்.

எஜமானைக் கொலை செய்தது பாரிய குற்றம். அதற்கான காரணம் நீதிமன்றத்துக்கு அவசியமில்லை. சாராவிற்கு மரண தண்டனை விதித்தார்கள். சாகும்வரை கற்களால் எறிய வேண்டும்.

உலக நாடெங்கிலுமுள்ள மனித உரிமை அமைப்புகள் இம்மரண தண்டனையை நிறுத்தக்கோரி போராடின. டுபாய் நாட்டு அரசிற்குக் கண்டனத்திற்குமேல் கண்டனமாய்க் குவிந்தன. அடிக்குமேல் அடி அடித்தால் அம்மி நகருமோ தெரியவில்லை, டுபாய் அரடு அசைந்தது. சாராவிற்கு ஒன்றரை வருடச் சிறைத்தண்டனை எனத் தண்டனை மாறியது.

தனது தண்டனைக் காலம் முடிந்து சாரா இந்த மாதம் தனது நாட்டிற்குத் திரும்பி வந்துவிட்டாள். இனித்தான் கதையின் இரண்டாம் பாகம். பல உண்மைச் சம்பவங்கள் புத்தகங்களாய் திரைப் படங்களாய் வெளிவந்திருக்கின்றன, பணந் தேடித்தரும் நல்ல வியாபாரம்.

சாராவின் கதையும் படமாகி திரைக்கு வரத் தயாராகிக்கொண்டிருக்கும்போது இப்படத்தைத் தங்கள் நாட்டில் திரையிட இரு நாடு தடை விதித்திருக்கிறது. எந்த நாடாக இருக்குமென்று நினைக்கிறீர்கள்? தனது நாட்டை அவமதிக்கின்றது என்றுசொல்லி டுபாய் அரசு தடை செய்திருக்கிறது என்று நீங்கள் நினைக்கிறீர்கள். அது தப்பு. தடை செய்தது பிலிப்பைன்ஸ் அரசு. தனது நாட்டிலிருந்து பெண்கள் குழந்தைகள் பலர் டுபாய் நாட்டில் வேலை செய்வதாலும் இன்னும் பலர் அங்கே வேலை தேடிப் போகக்கூடுமென்றாலும் டுபாய் நாட்டுடன் நாம் நல்லுறவை விரும்புவதால் இந்தப் படத்தைத் தனது நாட்டில் தடை செய்வதாக அரசு தெரிவிக்கின்றது. இது எப்படியிருக்கின்றது? பாவம் சாராக்கள்.

## வாழ்க ஜனநாயகம்!

Rzeszow என்ற ஊர் போலந்து நாட்டிலிருக்கிறது. வேலை ஒன்றிருப்பதாகத் தனக்கு தொழில் நிறுவனங்களுக்கு அனுப்பப்பட்ட கடிதத்தை எடுத்துக்கொண்டு பெண் மணியொருவர் வருகிறார். அதிகாரி பெண்மணியை அமரச் சொல்லிவிட்டு, தனது மேசையைக் குடைந்து மூன்று பத்திரங்களை எடுத்தார். மூன்று இடத்தில் வேலை காலியாக இருக்கிறது என்பதை அறிந்து அந்தப் பெண் மணி சந்தோசப்படுகி றாள். வேலையற்றோருக்கான குறைந்தளவு உதவித்தொகையில் சீவிக்கும் அவர் நீண்ட காலமாக வேலை தேடி அலைகிறாள். என்னென்ன வேலை யென்று அதிகாரி அப்பெண்ணுக்கு விளக்கினார்.

1. சமூகத்திற்கான பெண்
2. உடம்பு பிடித்துவிடும் பெண்
3. இரவு விடுதியில் நடனம்

வந்த பெண்ணுக்கு ஆத்திரத்தால் உடல் பதறுகிறது. இந்த வேலைகளைத் தேடித்தர அரசு நிறுவனங்கள் தேவையில்லை. விரும்பினால் என்னால் எப்பவோ தேடிப்போயிருக்க முடியும். கதவை ஓங்கியடித்துவிட்டு அப்பெண் போய்விட்டாள்.

தொழில் திணைக்களத்தால் சிபார்சு செய்யப்பட்ட வேலையை நிராகரித்தபடியால் அப்பெண்ணுக்கான வேலையற்றோர் உதவிப் பணம் நிறுத்தப்படுகிறது. இந்த மாதிரியான சம்பவம் இந்த உலகில் மட்டுமல்ல, போலந்தின் எல்லா இடங்களிலும் அடிக்கடி நடைபெறுகின்றன.

தனது நாட்டுப் பெண்களைத் தானே விபச்சாரத்திற்கு நிர்ப்பந்திக்கிறது மக்களால் தெரிவு செய்யப்பட்ட போலந்து அரசு.

வாழ்க ஜனநாயகம்! வாழ்க வலேசா!

போலந்தின் தலைநகரான வன்கோவில் மட்டும்தான் 500 விபச்சார விடுதிகள் அறியப்பட்டுள்ளன, ஆனால் சில உடல் பிடித்து விடும் நிலையம், நடன விடுதிகள் என்ற பேர்களிலேயே பதியப்பட்டுள்ளன. இன்றும் சில சமூகத்திற்கான பெண்கள் (women for society) என்ற பெயரில் இயங்குகின்றன. இவற்றிற்கே அரசின் தொழில் திணைக்களம் பெண்களை வழங்குகிறது.

மேற்கு ஐரோப்பா நாடுகளிலிருந்து பல உல்லாசமாக வரும் பிரயாணிகள் மலிவாகப் பொழுதைக் களிக்கிறார்கள். மதிலை உடைத்தவர்கள், அதற்கான பலனை அனுபவிக்க வேண்டாமோ. இன்று போலந்தில், நாளை...?

-பொறுக்கி

M

MARKANDAN & CO
SOLICITORS
Empowered to Administer Oths

Tamil House, 720 Romford Road, Manor Park, London E12 6BT

ALL ASPECTS OF IMMIGRATION MATTERS TO APPEALS TO EUROPEAN COURT OF HUMAN RIGHTS

ALL TYPES OF CONVEYANCING
LITIGATION
ALL COURTS CIVIL/CRIMINAL
LANDLORDS/TENANT MATTERS
MATRIMONIAL
POLICE STATION ADVICE
ALL D.S.S AND HOUSING BENEFIT MATTERS
FREE ADVICE FOR 15 MINUTES ON THE FIRST ATTENDANCE

LEGAL AID

WE ARE ALWAYS FRIENDLY, EASY TO TALK AND KEEN TO HELP

M.MARKANDAN
TEL: 0181 514 8188
FAX: 0181 514 8303

www.padippakam.com





# வாக்கு மாறி...

மாறன் (மிற்றி பல்கலைக் கழகம்)

அந்தக் கொதிக்கும் வெயிலில் வெளியில் வர யாருக்குமே மனமில்லை.

ஆடு மாடுகள் கூட மரநிழலில் ஆறுதலாகக் கிடைப்பவற்றைக் கடித்துக் கொண்டிருந்தன.

மனிதர்கள் நிழலின் ஆதரவிலேயே இயங்கிக் கொண்டிருந்தனர். உயரே பறந்த விமானங்கள் ஊரும் மாட்டு வண்டிகள் ஆங்காங்கே சிறகடித்த பறவைகள் தவிர ஊரில் ஒரு அமைதியே நிலவியது.

ஊரின் எல்லையில் தான் நடராசரின் வீடு. வீட்டு வளவெங்கும் கவனிப்பாரற்று பற்றைக்காடு வளர்ந்து விட்டிருந்தது. மரங்களில் பழங்கள் கேட்பாரின்றிப் பெருகி அணில்களும் காகங்களும் கூடும் இடமாக்கி விட்டிருந்தன.

அந்த விசாலமான வீட்டில் நடராசரும் மனைவி பார்வதியும் கூடவே அவர்களது வீட்டு நாய் ஜிம்மியும் தான் வாழ்கிறார்கள் என்பது அந்த வீட்டைப் பார்த்த மாத்திரத்திலேயே அறிந்து கொள்ள முடியும்.

நடராசர் ரொம்பவும் தான் மாறிவிட்டார். தலையில் வெள்ளிக் கம்பிகள் ஆங்காங்கே தொடங்கி முற்றாக ஆக்கிரமித்தபோது கூட ஏற்படாத தளர்ச்சி இப்போது.

கடந்த காலங்களில் அவரது பேச்சிற்குத் தனி மதிப்பிருந்தது. அவரது தீர்ப்பு இறுதி முடிவாயிருந்தது

மனிதர் இப்போ அவை பற்றி பேசுவதே இல்லை. சொல்வதைக் கேடபதற்கு ஆளிருக்கும் பட்சத்தில் தானே அதிகாரம் பண்ணுவதிலும் ஓர் அர்த்தம் இருக்கும்.

ஜிம்மி முதன்முதலாக வீட்டிற்குக் கொண்டு வரப்பட்டபோது அது அப்போது தான் பால்குடி மறந்திருந்தது. அதனது கறுப்பு மேனியில் ஆங்காங்கே வெள்ளிப் புள்ளிகள் எடுப்பாகத் துருத்திக் கொண்டிருந்தன.

அவரது பேரப்பிள்ளைகளுக்கோ மகிழ்ச்சி பொறுக்கவில்லை. எல்லோரும் அதனைக் கையிலெடுத்து அழைந்து கொண்டனர். ஜிம்மியும் தனது புதிய எஜமானர்களை மகிழ்ச்சியுடன் ஏற்றுக் கொண்டது. பெயர் வைக்கும் படலம் ஆரம்பமானதும் அவரது முத்த பேரன் தான் விடாப்பிடியாக நின்று ஜிம்மி என்ற இங்லிஷ் பெயர் தான் வைக்கவேண்டும் என்று அடம்பிடித்தான். லசி, லக்கி, பிறோன் என்ற பெயர்கள் நடுவில் ஜிம்மி தான் நடராசருக்கும் இலகுவில் வாயில் நுழைக் கூடியதாக இருந்ததால் அதுவே ஏற்றுக்கொள்ளப்பட்டது.

அன்றிரவு பேரப்பிள்ளைகள் ஜிம்மியைப் படுக்கையறை வரை கொண்டு செல்ல முயன்ற போது நாய் வீட்டுப் படி தாண்டி வரக்கூடாது என்ற கண்டிப்பான உத்தரவும் போடப்பட்டது. இன்றுவரை அது மீறப்படவில்லை.

'அது அதுக்கெண்டு ஒரு நியதி இருக்கு' அவரது பொன்வாக்கு.

தனது பிள்ளைகளின் திருமணவிடத்தில் கூட மனிதர் எவ்வளவு கறாராக இருந்தார்.

"அவையின்ரை சாதி சமயம் என்ன?"

"சீதனம் எந்த மட்டிலை"

"பெட்டை எங்களை மீறக்கூடாது"

இறுதியாக

"எதுக்கும் நான் சொல்லுற வரைக்கும் ண்டுக்கும் ஒம்படாதேங்கோ"

கடைசி மகனின் திருமணம் வரை ந்த மரபு கடைப்பிடிக்கப்பட்டது. குடும்பத்தின் பெரிய பொறுப்புக்கள் யாவும் பெருன் கையிலேயே விடப்பட்டன.

வீட்டின் வாசல் முன் மாமர நிழலில் சுருண்டு படுத்திருந்த ஜிம்மி தன் தூக்கத்தைக் கெடுத்துக் கொண்டிருந்த உண்ணிப் பூச்சிகளுடன் போராடிக் கொண்டிருந்தது.

அவரைப் போலவே ஜிம்மியும் முதுமையின் தோற்றத்தை வெளிக்காட்டிக் கொண்டிருந்தது. பின் முதுகில் குட்டை த்து அசிங்கமாக வெளித்தெரிந்தது.

ஜிம்மியின் நரை விழாத முதுமை வருக்கு ஒரு குறையாகத் தெரியவில்லை. இருந்தாலும் அதன் வேதனையைப் போக்குவதற்காக கந்தகம் தடவி யைக் குளிப்பாட்டிப் பார்த்தார். பெரிதாக பலனும் கிடைக்கவில்லை.

'நீ இன்னும் சாப்பிடேல்லையே' வதியின் குரல் வீட்டிற்குள்ளிருந்து ஒரு சட்டை கலந்து வந்தது.

அவள் அவரிடம் அப்படி நடந்து ள்வது ஆரம்பத்தில் புதிதாகவும் ருவருப்பாகவும் இருந்தாலும் பின்னர் அவர் அதைத் தாங்கிக்கொள்ளப் பழகி விட்டார். தனக்கு முன் தலைநிமிர்ந்து பேசவே பயப்பட்ட அவள் இன்று தனது கடந்த கால நடவடிக்கைகளுக்குப் பழி வாங்க நிற்கிறாள்.

அவரால் எத்தனை அடிகள் திட்டுக்கள்....

அவை இன்று அவரை விரட்டுகின்றன.

அவருக்குத் திண்ணையில் உட்கார்ந்து சாப்பிடுவதில் ஒரு திருப்தி. அவர் சாப்பிடுவதைக் கண்டதுமே ஜிம்மி ஓடி வந்து அவர் அருகில் வாலாட்டிக் கொண்டு நின்றது.

நடராசரது தட்டிலிருந்து தவறிவிழும் உணவுப் பருக்கைகளுக்கும் அவர் வேண்டாமென்று எறியும் உணவின் ஒரு பகுதிக்கும் ஜிம்மியால் நன்றி கூறப்பட்டது.

ஜிம்மி தனக்கு விதிக்கப்பட்ட நியதிகளை மீறாமல் வாசல் படியிலிருந்து ஒரு இரண்டடி தள்ளியே நின்றது. நடராசருக்கும் அது ஏற்புடையதாயிருந்தது.

"அவரவருக்கெண்டு ஒரு நியதியிருக்கு அதைமீறிப்போறவை இந்தச் சமூகத்திலை வாழேலாது"

இந்த வாசகத்தை அவரது இரண்டாவது பேத்தி சித்திராவின் வாழ்விலும் நிரூபித்துக் காட்டினார்.

சித்திரா.... சாதிக்காரனோடை ஓடிப் போவாளெண்டு அவர் கனவிலும் நினைத்துப் பார்த்திருக்க மாட்டார்.

வீட்டில் ஆண்களும் பெண்களும் கொதித்துப்போய் விட்டார்கள்.

"என்ன துணிச்சல்"

ஒருவாறு அவளைத் தேடிப்பிடித்து வீட்டிற்குள் கொண்டு வந்து விட்டார்கள். வீட்டில் அவள் சித்திரவதைக்குள்ளானாள்.

ஆனால் அவர்களது முயற்சியால் அவளது காதலை உடைக்க முடியவில்லை.

"பெட்டையின்ரை காலை அடிச்சு முறியுங்கோ. இனி எப்பிடி ஓடுறாளெண்டு பாப்பம்"

–தீர்க்ககரமான அறிவுரை.

நடராசர் இந்தப் பிரச்சனையை வேறு விதமாக அணுகினார்.

"பிள்ளை இந்த உலகத்திலை பிறந்த நாங்கள் வாழறதுக்கெண்டு ஒரு முறையிருக்கு. இது உலகம் படைக்கப்பட்ட காலத்திலையிருந்து இன்னும் மாறாமல் அப்பிடியே தான் இருக்கு......"

"நீயென்னவோ பெரிசாச் சாதிக்கிறதா நினைச்சு இப்பிடி நடக்கலாம். ஆனா உன்னால இந்தக் குடும்பத்துக்கு வரப்போற அவப்பேரை நினைச்சுப்பார். எங்களைப் பிறகு என்ன சாதி சொல்லிக் கூப்பிடு வான்கள்....."

"உன்ரை தங்கச்சிமாரின்ரை வாழ்க்கையை நினைச்சுப் பார். உன்ரை மச்சாள்மாரின்ரை வாழ்க்கையை நினைச்சுப் பார்"

அவரது முயற்சி பாரிய வெற்றியைத் தந்தது. சித்திரா நடராசர் குறித்த வரனுக்கு அடுத்த மாதமே சம்மதம் சொல்லுவாள் என்று யாருமே எதிர் பார்த்திருக்கவில்லை.

நடராசர் கொழுத்த சீதனத்தை வாரியிறைத்துச் சடங்கை அரங்கேற்றி வைத்தார்.

மணமகன் சீதனத்தொகையில் பூரித்துப் போனான். அடுத்த வருடமளவில் அவர்கள் வெற்றிகரமாக கனடா போய் அங்கேயே குடியேறி விட்டனர்.

அவருக்கு அது ஒரு சாதனையாகவே பட்டது. தனது நம்பிக்கைகளில் அவர் திடமாகவே இருந்திருக்க வேண்டும்.

அவரது வலக்கை உணவை எடுக்கக் கீழே போவதும் பின் வாய்க்குக் கொண்டு போவதுமாயிருந்தது. அதற்கேற்ப ஜிம்மியும் தன் கண்களை ஏற இறங்க விட்டுக் கொண்டிருந்தது.

முதல் மகன் வெளிநாடு போனபோது அவருக்குப் பெருமை பிடிபடவில்லை.

ஊரெல்லாம் தம்பட்டம் அடித்துக் கொண்டார்.

தனக்குக் கொள்ளி வைக்க மற்றப் பிள்ளைகள் இருப்பார்கள் என்ற துணிவு. ஆனால் அவர்கள் ஒவ்வொருவராய் கழன்று கடைசி மகனும் புறப்பட்ட போது அவர் அழுதே விட்டார். கொள்ளிக்காகவல்ல. பாசத்திற்காகவே பெரிதும் அழுதார்.

பிள்ளைகள் போனபோதும் பார்வதி இருக்கிறாள் என்று திருப்திப் பட்டுக் கொண்டார். ஆனால் பார்வதி அவர் நினைத்ததற்கு மாறாக நடந்த போது மனிதர் இடிந்தே போய் விட்டார்.

ஜிம்மியின் உறவு அவருக்குப் புதிதல்ல என்றாலும் அது ஒரு புதுப்பிக்கப்பட்ட உறவு.

மனிதர் ஜிம்மியிடம் பேசிக் கொள்வதும் உண்டு.

"பகல் முழுக்க எங்கை போனனி"

"ஏன் நேற்று வைச்ச கஞ்சியைக் குடிக்கேல்லை, அப்பிடியே கிடக்கு"

"நீயென்டாலும் என்னோடை இரு" ஆதங்கத்துடன் சொல்லிக் கொள்வார்.

"அதுக்கு அறளை பேந்து போச்சு. நாயோடை போய்க் கதைக்குது"

பார்வதி அவரது நடவடிக்கையை பார்த்து அக்கம் பக்கத்தாருக்குச் சொல்லி தன் பொக்கை வாய் தெரியச் சிரித்துக் கொள்வாள்.

ஒரு மனிதன் தன் பேச்சைக் கேட்க ஆளில்லாத சமயத்தில் தனக்குள் புழுங்கிக் கொள்வான். தனது மனதிற்குள் தனக்குத் தானே பேசிக்கொள்வான். இந்த நிலை நாளடைவில் தவிர்க்க முடியாமல் வார்த்தையாக வெடிக்கும். அப்போது அவனுக்கு சுவர்களும் மரங்களும் கூடவே மிருகங்களும் மனிதர்களாகத் தெரிவர். அவற்றுடன் தன் அங்கலாய்ப்பைத் தீர்த்துக் கொள்வான் என்ற உண்மை பார்வதி அம்மாவிற்குத் தெரிய நியாயமில்லைப் போலும்.

வாழ்வின் கடைசி அத்தியாயத்திற்கு வந்து விட்ட நடராசரைக் கடந்த வாரம் சித்திராவிடமிருந்து வந்த கடிதம் மேலும் உலுக்கிவிட்டது.

கடிதத்தின் சுவரை அவளது அழகான முத்து எழுத்துக்கள் அலங்கரித்திருந்தன. கவரில் எடுப்பாக கனேடிய முத்திரை பொறிக்கப்பட்டு இருந்தது.

உள்ளே கடிதம் கசங்கி இலேசாகக் கறை படிந்தும் இருந்தது. பல நாட்களுக்கு முன் எழுதப்பட்டு எங்கோ மறைத்து வைக்கப்பட்டுக் காலம் தாழ்த்தி அஞ்சல் செய்யப்பட்டிருக்கிறது என்பதை அவர் சட்டென்று ஊகித்துக் கொண்டார்.

எழுத்தில் வழமைக்கு மாறான நடுக்கம்.

"அன்பின் அப்பு, ஆச்சி அறிவது....

இங்கு வந்த சில காலங்களுக்குள்ளேயே சீதனத்திற்காக வந்த மாப்பிள்ளை தன்னை இனம் காட்டத் தொடங்கி விட்டார்......"

"எமது வாழ்விற்குப் பயன்படாத உங்கள் சடங்குகள் எமக்கெதற்கு...."

நடராசரது கண்களிலிருந்து ஓட்டை விழுந்த தாங்கியாகக் கண்ணீர் ஒழுகியது. அவரது கண்ணீர் அவர் தட்டிலிருந்த உப்புச் சப்பில்லாத உணவிற்குச் சுவையூட்டியிருக்க வேண்டும். ஆனாலும் அவரது வலக்கை வாய்க்குள் செல்லாமல் தட்டிலேயே குழைந்து நிற்க ஜிம்மி கண்களை அப்படியே குத்தி நிறுத்திக் கொண்டது.

அவரது ஒவ்வொரு கடந்த கால நடவடிக்கைக்குமான விளைவுகள் இப்படித்தான் அவரை வந்து தாக்குகின்றன.

"நான் செய்தவற்றில் என்ன பிழை? இந்தக் குடும்பம் உடையக் கூடாதெண்டு நான் நினைச்சது தவறா? இதுக்கு வேறை வழி தான் என்ன?

எங்கடை முன்னோர் தந்த வாழ்க்கை முறையை நான் எப்பிடி மீறுவன்?"

அதற்கு மேல் மனிதரால் சாப்பிட முடியவில்லை. தட்டை வழித்துப் படியிலிருந்து இரண்டடி தள்ளிக் குவித்து விட ஜிம்மி நன்றியுடன் அந்த இடத்தை ஆக்கிரமித்தது.

"சாப்பாட்டை ஏன் கொட்டினனீ? கோவத்தைச் சாப்பாட்டிலையே காட்டுறது"

அவளின் கேள்விக்கு அவர் பதில் சொல்லும் நிலையிலில்லை. அவளும் வெடுக்கென்று உள்ளே போய்விட்டாள்.

'என்ரை வாழ்க்கை முழுக்க இந்தக் குடும்பத்தைப் பாதுகாக்கத் தான் கஷ்டப் பட்டனான். ஆனா அது எந்தளவுக்கு என்ரை எதிர்காலச் சந்ததிக்கு உதவிச்சுது?'

'இனி அந்தக் காலம் திரும்பாது. இண்டைக்கு என்ரை கையிலை எந்த அதிகாரமும் இல்லை. இந்த அதிகாரம் நான் தேடிக்கொண்டதா? என்னைப் போல ஒவ்வொரு குடும்பத்திலையும் ஒருத்தன்....'

சிந்தித்தவர் சட்டென்று எழுந்து ஜிம்மியைத் தடவிக் கொடுத்தபடி நின்றார். அவருக்கு அதன் குட்டை தெரியும் உடல் அருவருப்பாகத் தெரியவில்லை. அதனைச் சுற்றிப் பறந்து கொண்டிருந்த பூச்சிகளை அவர் சட்டை செய்யவில்லை.

தன்னால் இன்னும் ஏதாவது சாதிக்க முடியும் என நம்பியவர் ஜிம்மியை வீட்டிற்குள் அழைத்தார். ஜிம்மி ஒரு முறை தடுமாறிய பின் படியில் கால் வைத்து உள்ளே ஏறியது.

பார்வதி ஒருமுறை திடுக்குற்றாலும் அந்த இடத்தில் பேச்சுவாக்குப்பட விரும்பவில்லை.

'மனுசனுக்கு நல்லா வாக்கு மாறிப் போச்சு'

அதன்பின் யாருமே அங்கு பேசவில்லை.

அது சித்திராவின் காதலுக்கு மறுக்கப்பட்ட இடம். மற்றைய சாதிக்காரருக்கு மறுக்கப்பட்ட இடம். சில விநாடிகளுக்கு முன் வரை ஜிம்மிக்கும் கூடத்தான்.

இங்கே ஒழுக்கநெறி சிதறி உடைகிறதா இல்லை ஏதோ இரக்கத்தின் வெளிப்பாடா அல்லது மனிதருக்கு உண்மையிலேயே அறளை பேந்து தான் போய்விட்டதா.........

இதையெல்லாம் ஆராய்ச்சி செய்ய விரும்பாத ஜிம்மி அவர் காட்டிய ஒரு மூலையில் விசுவாசத்துடன் படுத்துக் கொண்டு வழக்கம் போல தெள்ளு விரட்டும் பணியில் தீவிரம் காட்டிக் கொண்டிருந்தது.

**'இனி அந்தக் காலம் திரும்பாது. இண்டைக்கு என்ரை கையிலை எந்த அதிகாரமும் இல்லை. இந்த அதிகாரம் நான் தேடிக்கொண்டதா? என்னைப் போல ஒவ்வொரு குடும்பத்திலையும் ஒருத்தன்.....'**

படிப்பகம்

www.padippakam.com



# அறியாமை இருள்

(5ஆம் பக்க தொடர்ச்சி)

திட்டங்களாக வைத்துக்கொண்டு, நாமே நம்மை உயர்வாக மதிக்கிறோம். ஆனால் உலகம் நாம் என்ன செய்தோம் என்பதை வைத்தே நம்மை மதிப்பீடு செய்கிறது. இப்படியொரு கோணத்தில் நின்றே புலம் பெயர் வாழ்வு அவலமானது, ஏதிலிநிலை கொண்டதெனப் பலரும் முடிவு கட்டு கிறார்கள். ஆனால் புலம்பெயர் வாழ்வு உலகத்தின் அதி உன்னதமான அறிவியல் வளர்ச்சிக்குப் பக்கத்திலிருப்பதை ஏனோ பலரும் கண்டுகொள்வதில்லை. புலம்பெயர் தமிழர்கள் மேலைநாடுகளில் தமக்குக் கிடைத்துள்ள மகத்தான அறிவியல் வாய்ப் புக்களைச் சரியாகப் பயன்படுத்திக் கொண்டால், அவர்கள் ஒரு பெறும்திமிக்க மக்கள் குழுவென்பதை, உலக அரங்கில் உறுதியாக நிலைநாட்ட முடியும். "கற் றோர்க்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பு" என்ற பழமொழிக்குள்ளேயே நாம் பெறக் கூடிய உயர்வும் மறைந்து கிடக்கிறது. அதே வேளை நமது அறிவு இன்னொரு கையறு நிலைக்குள் நம்மை அழைத்துச் செல்லாத வகையில் நுட்பமாக பின்னப்பட வேண் டியதும் அவசியமாகும்.

ஒரு குறிப்பிட்ட வளர்ச்சிநிலைக்குப் பின்பு, மனிதனின் மூளையின் நிறை வரு டாந்தம் மூன்று கிராம் அளவு குறைவ டைந்து செல்லும். இது, அறுபது வயதின் பின்னர் மிக வேகமாகி வருடாந்தம் நாலு கிராம் என்ற வேகத்தில் வீழ்ச்சியடைந்து செல்லும். எனவேதான் எதையும் பின் போடலாம், அறிவைப் பெருக்கும் பணியை மட்டும் கணப்பொழுதும் பின்போடக் கூடாது. "ஓம் தத்வமசி" என்கிறது வேதம். இதன் கருத்து "எல்லாம் என்பது நீயே!" உனது உயர்வுக்கான விசையும், அதற்கான செயல்பாடுகளும் உனக்கு வெளியில் இல்லை. இதை ஒருவர் அறிவால் காணும் போதே அவரைச் சூழ்ந்துள்ள முதல் இருள் விலகுகின்றது. ஒருசில மேதைகளும் பல கோடி மந்தைகளும் கொண்ட உலகம் பெருமைசார் விடயமல்ல. எல்லோரும் அறிஞர்களே என்பதில்தான் உலகம் பெரு மைப்படுகிறது. இதை விளக்கவந்தபோதே சோக்கிரடீஸ், "உன்னையே நீ அறிவாய்!" என்று கூறினார். அதையே திருமூலர், "தன்னையறிந்தால் தனக்கொரு கேடில்லை!" என்று பாடி வைத்தார். இவைகளை ஒவ் வொரு மனிதனும் தனக்குள்ளேயே அறிந்து

'நன்றி' இலக்கிய மலர்
TWAN , 1996

# அம்மாவுக்கு...

அம்மா!
இரத்தமும் சதையும்
கொடுத்தவள் நீ
உறக்கமறுத்து
உணவைப்பிரித்து
உதிரம் கொட்டி
உயிராய்த் தந்தவள் நீ

அன்பினில் தாலாட்டி
அறிவையூட்டி
உணர்வைக் கொடுத்து
உறவைத் தந்தவள் நீ

சேர்வும் பகுப்பும்
மனிதநேயமும் கூறி
கேட்கிறாய் பிள்ளையை
உன்னுடன் மட்டும்
மனிதத்தை மரணம்
பலாத்காரமாய்ப்
புணரும் இச்சூழலில்
எப்படி மீள்வேன்



S.ரகுபதி
01.06.94

# வ. கீதாவுடன்....

(10 பக்கத் தொடர்ச்சி)

'பிற்போக்கு' தன்மைகளை மதிப்பீடு செய்வதும் கூட உடலை –அதாவது மானுட உடலை– பொருள் தன்மையுறச் செய்வதற்கு (reification) ஒப்பாகும் என்பது என் கருத்து.

8. சாதியும் பாலியலும் சந்திக்கும் புள்ளியில் பெண் ஒடுக்கு முறையை அடையாளம் காண்பது எந்தளவில் சரியானது? இந்திய நிலைமையிலும் வளர்ச்சியடைந்த இந்த நாடுகளிலும் செல்லுபடியாகக் கூடிய ஒன்றா?

சாதி என்பது ஒரு விதத்தில் நிறவெறி/இறுமாப்பு போன்றது தான். பெரியார் ஒருமுறை கூறிய துபோல், அது நம் எல்லோரிடையேயும் ஏணிப்ப டிபோல் காணப்படும் ஒன்று. இந்து –இந்திய சமுதாய– பொருளாதார அமைப்பினை, அதன் ஏற்றத் தாழ்வுகளை, முரண்களை கட்டிக்காத்து ஒடுக்கப்படும் மாந்தர் அனைவரும் ஒன்றாக இணைவதை சாத்தியமற்றதாக்கியே சாதி செயல்ப டுகிறது. குறிப்பிட்ட சாதியின் அடையாளத்தை, 'மானத்தை', காப்பவள்/ உறுதிப்படுத்துபவளாக இருப்பவள் பெண். அவள் சாதியின் கட்டுக் கோப்பை தகர்த்தெறிய முற்பட்டாலோ அல்லது அவள் சார்ந்திருக்கும் சாதியை இழிவுபடுத்த அயல்சாதி ஆண்கள் அவளை 'மானபங்கப்படுத் தினாலோ', உயர்சாதி ஆண்கள் தலித், பழங்குடி யினப் பெண்களை பாலியல் வன்முறைக்கு ஆளாகினாலோ –இவை அனைத்தும் குறிப்பிட்ட சாதியின் கட்டுப்பாட்டைக் குலைக்கும் செயல்கள். எனவே சாதியும் பாலியலும் அதாவது சாதி அடை யாளமும், சாதி சமுதாயத்தில் பெண்களுக்கு ஒதுக் கப்பட்டுள்ள பாலியல் பாத்திரமும் ஒன்றை மற் றொன்று சார்ந்து இயங்குவதால் இவை இரண் டும் சந்திக்கும் புள்ளியானது பெண்ணியப் போராட் டத்தின் முக்கிய களன்களில் ஒன்றாகிறது.

சாதியடையாளம் பெண்களின் பாலியலைக் கட்டுப்ப டுத்துவதன் மூலம், அக் கட்டுப்பாட்டினூடாக உறுதி செய்யப்படுகிறது. அவ்வாறே சமய, பண் பாட்டு, தேசிய, இன, நிற அடையாளங்களும் நிலைநிறுத்தப்படுகின்றன. பொஸ்னிய முஸ்லிம்க ளுக்கு 'பாடம்' கற்பிக்க சேர்பியர்கள் கையாண்ட வழிமுறை : முஸ்லிம் பெண்களின் மீது திணிக் கப்பட்ட மிக கோரமான பாலியல் வன்முறைச் செயல்கள்தான் என்பதை நாம் இங்கு நினைவில் கொள்ள வேண்டும்.

9. அ) ஈழத் தேசிய விடுதலைப் போராட்ட நிலைமையில் கவனத்திற்குட்படுத்தப்பட வேண்டிய கேள்விகளில் ஒன்று இது. இன்று பெருமளவில் பெண்கள் ஆயுதம் ஏந்தியுள்ளனர். இது சமூக மதிப்பீடுகள் சிலவற்றை உடைத்து நொருக்கியிருந்தாலும் அடிப்படையில் பெண்கள் பற்றிய மதிப்பீடுளை நொருக்கிவிடவில்லை – குறைந்தபட்சம் கேள்விக்குள்ளாக்கியதாகக் கூட இல்லை. இந்த நிலைமையில் போராட்டம் ஒரு முடிவுக்குக் கொண்டு வரப்பட்டபின் அல்லது இதி லிருந்து விலகிக் கொண்ட பெண்களை சமூக மதிப் பீடுகள் வஞ்சித்துவிடும் அபாயம் உள்ளது. இது பற்றி உங்கள் கருத்து?

ஆ) இன ஒடுக்கு முறைக்கு உள்ளாகும் தேசத்தில் ஆணாதிக்கத்தால் ஒடுக்கப்படும் பெண்களுக்கு போராட் டம் என்பது இரட்டை நிலைப்பட்ட ஒன்று எனும் போது, தேசிய விடுதலைப் போராட்டத்தில் பெண்கள் உதிரிகளாகச் செயற்படுவதா? அமைப்புகளாக கலந்து போராடுவதா சிறப்புடையதாக இருக்கும்?

இன்று ஈழத்திலும் உலகின் வேறு பல இடங்க ளிலும் நடைபெற்று வரும் தேசிய இனப் போராட் டங்களில் பெண்கள் பல்வேறு நிலைகளில் பங் கேற்று வருகின்றனர். ஒரு பெண் தன்னை 'பெண்ணாக' மட்டும் உணர்ந்து வாழ்வதில்லை. குறிப்பிட்ட தேசிய இனத்தைச் சேர்ந்தவளாக, குறிப்பிட்ட மொழியைப் பேசுபவளாக, குறிப்பிட்ட மதசார்புடையவளாக, தன்னை உணர்கிறாள். எனவே தேசிய இனப் போராட்டங்களில் அவள் பங்கேற்பதில் எந்த அதிசயமும் இருக்க முடியாது. ஆனால் போர், அது ஏற்படுத்தும் நாச விளைவு கள், அது உருவாக்கும் எதேச்சதிகார அரசியல், பெண்களை போர்ச் சூழல் பாதிக்கும் விதம் – இவற்றைப் பற்றிய பெண்ணிய மதிப்பீடுகள் அவசி யம். போராட்டத்தில் ஈடுபட்டுள்ள பெண்களால் –இன்றைய ஈழப் போராட்டச் சூழலில்– இதைச் செய்ய முடியாது என்றே எனக்குப் படுகிறது. ஏனெனில் தேசிய விடுதலைப் போராட்டத்தின் தன்மை, உள்ளடக்கம் முதலியவற்றை யோசித் தால் அன்றி மேற்கூறிய விமர்சனத்தை அவர்க ளால் மேற்கொள்ள முடியாது.

தமிழகத்திலும் சரி, ஈழத்திலும்சரி, தேசிய அடை யாளம் என்பது 'இனமானம்' 'இனப்பெருமை' என்பன போன்றவற்றினூடாக வெளிப்படுவதாகக் கொள்ளப்படுகிறது. இங்கு 'மானம்' என் பது பெண்களின் 'கற்பு', 'மானம்' போன்றவற்றுடன் தொடர்புபடுத்திப் பேசப்படுகிறது. தமிழகத்தை 'கன்னித்தாயாக' உருவகிக்கும் சொற்பிரயோகங்க ளைப் பற்றி நாம் அனைவரும் அறிவோம். இவ்வாறு விளக்கப்படும் தேசிய அடையாளம் பெண்கள் ஏற்று தமதாக்கிக் கொள்ளக் கூடிய அடையாளமாக இருக்க முடியாது. ஏனெனில் பெண்ணின் பாலியலை குறிப்பிட்ட வடிகால்க ளுக்குள் செலுத்தி/முடக்கி செயல்படும் இவ் விளக்கம் பெண்களை அந்நியப்படுத்தும் ஒன்றாக விளங்குகிறது. எந்தவொரு சிந்திக்கும் பெண் ணாலும் இந்த அடையாளத்தை ஏற்றுக் கொள்ள முடியாது.

தேசிய இனப் பிரச்சனை, அதற்கான தீர்வுகள் ஆகியவற்றை பெண்ணிய நிலைப்பாட்டிலிருந்து விளக்குவதும், தேசிய இனப்போராட்டத்துக்கு பெண்ணிய உள்ளடக்கம் வழங்குவதும் தான் பெண்களை ஆக்கப்பூர்வமான வகையில் போராட் டத்துடன் இணைக்க உதவும். ஆனால் இதற்கு முன்நிபந்தனையாகவும் போராட்டத்தின் போதும் குடும்பம், சாதி, மதம், 'தமிழ்ப் பண்பாடு' முதலிய னவற்றை மறுவிளக்கம் செய்வதும் மாற்றிய மைக்க முயற்சி செய்வதும் அவசியம். ●


தமிழ் அவைக்காற்று கலைக் கழகம் வழங்கும்

இவ்வாண்டின் புதிய நாடகங்கள்

நவம்பர் நாடக விழாக்கள்

கிழக்கில்: 15.11.97
Waltham Forest Theatre, London E17

மேற்கில்: 8.11.97
Winston Churchill Hall, Ruislip

தமிழ் அவைக்காற்று கலைக்கழகம்,
சிநேகபூர்வமான தமிழ் அமைப்புக்கள் மேற்குறித்த தினங்களைத் தவிர்த்து தமது கலை நிகழ்வுகளை ஒழுங்கு செய்யுமாறு பணிவுடன் கேட்டுக்கொள்கிறது.

தொடர்புகளுக்கு: க.பாலேந்திர - 0181 459 4335 க. கிருஷ்ணராஜா - 0181 470 7883

www.padippakam.com



வெளி

When she deserves
only the best......

Mulji's

SPECIALISTS IN 22CT GOLD HALLMARKED JEWELLERY AND EXCLUSIVE DIAMOND JEWELLERY

உங்கள் விருப்பத்திற்கேற்ப தாலிக் கொடி, வைரக் கல் தோடு, அட்டியல், பதக்கம் சங்கிலி; மெட்டி, மோதிரம்

Thali & Kodi made to order

Naclune cut bangles, Stone Earrings, Padakkam, Atyal, Baby bangles, Sovereigns

*Fascinating beauty*
*Plus real value*
*Gift some golden memories*
*this festive season*

*........Visit us for a variety of special offers*

216-219 UPPER TOOTING ROAD, LONDON SW17 7EW
TEL: 0181- 767 8818

## 'மோர்னிங் ஸ்டார்'
## சண்டே லீக் கிரிக்கெட் போட்டியில் சாம்பியனாக வருவதற்கு மும்முனை போட்டிகள்:

ஐந்தாவது ஆண்டாக "மோர்னிங் ஸ்டார் சண்டே லீக்" ஆல் நடத்தப்பட்டு வரும் 35 ஓவர் கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் இவ்வாண்டு 14 கழகங்கள் பங்குபற்றின. 10.8.97 வரை நடைபெற்ற முடிவடைந்த போட்டிகளின் படி தற்போது 3 கழகங்கள் சாம்பியனாக வரும் வாய்ப்புகள் உண்டு.

சாம்பியனாக,

(F)பிக்ஸ் மார்ஸ் அணியா? விம்பிள்டன் அணியா? லூசியம் தமிழ் அணியா?

தற்சமயம் (F)பிக்ஸ் மார்ஸ் அணியினர் 9 போட்டிகளில் கலந்து கொண்டு 8 வெற்றி பெற்றுள்ளனர்.

விம்பிள்டன் அணியினர் 10 போட்டிகளில் பங்குபற்றி 8 வெற்றி பெற்றுள்ளனர்.

லூசியம் தமிழ் அணியினர் 12 போட்டிகளில் விளையாடி 10 போட்டிகளில் வெற்றி பெற்றுள்ளனர்.

(F)பிக்ஸ் மார்ஸ் அணியினர் இனி நடக்க இருக்கும் நான்கு போட்டிகளிலும் வெற்றி பெற்றால் அவர்கள் தான் இவ்வாண்டின் சாம்பியன். ஆனால் இவ்வணியினர் இனி நடக்க இருக்கும் 4 போட்டிகளிலும் வெற்றி பெறுவார்களா?

## மீண்டும் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி சம்பியன்

25.08.97இல் நடைபெற்ற பாடசாலைகளுக்கிடையிலான கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் யாழ்.மத்திய கல்லூரியைத் தோற்கடித்து யாழ் இந்து சம்பியன். அரை இறுதிப் போட்டியில் யாழ்.மத்திய கல்லூரி அணியானது சென்.ஜோன்ஸ் கல்லூரியைத் தோற்கடித்தும், இந்துக் கல்லூரி அணியினர் யாழ். பற்றீக்ஸ் கல்லூரியைத் தோற்கடித்தும் இறுதிப் போட்டிக்குத் தெரிவானார்கள்.

### இருளில் நடந்த இறுதி போட்டி

முதலில் துடுப்பெடுத்தாடிய யாழ் மத்திய கல்லூரி 5 ஓவர்களில் 65 ஓட்டங்களைப் பெற்றனர். 66 ஓட்டங்களைப் பெறவேண்டிய நிலையில் இந்துக் கல்லூரி அணியினர் 69 ஓட்டங்களைப் பெற்று இவ்வாண்டின் JSSA வெற்றிக் கிண்ணத்தைத் தட்டிக்கொண்டார்கள்.




✧ WEDDINGS ✧ BIRTHDAYS ✧ ANNIVERSARIES ✧ CHILDRENS PARTIES ✧ OFFICE PARTIES & DISCO

பங்காரா, றெகே, பைலா மற்றும் ரகுமானின் பாடல்கள் *Reggae, Hiphop, Pop, Banghra, Jungle*

தமிழ் சிங்கள பைலா, பழைய புதிய சினிமாப் பாடல்கள்

தொடர்புளுக்கு:
Rajeevan: 0956 189 702
Suthan: 0956 301 153
Bavan: 0181 864 0691

SKY

We cater for all your occasions. Style in music with professional touch.